உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 31 | பரிதாபி – வைகாசி – 10—6—72 | இதழ் 7

## ஸ்ரீ அருணந்தி முனிவர் நினைவு மலர்

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

# அருந்தவச்செல்வர்

### இலக்கணத்திற்கு ஓர் இலக்கியம் :

அனுபவம் முதிர்ந்த சிவஞானிகளின் வாழ்வியல் பின்வரும் சந்ததியினர்க்கு வாழ்க்கை இலக்கணமாக அமைகிறது. சமுதாயத்திற்குச் சட்ட ஒழுங்காகின்றது; சமயநெறிக்குச் சாத்திரமாக மலர்கின்றது. இத்தகைய எடுத்துக்காட்டான வாழ்வியலை மேற்கொண்டு வாழ்ந்தவர்களில் ஒருவர் திருக்கயிலாய பரம்பரையில், திருநந்திமரபில் புறச்சந்தான குரவர்களில் இரண்டாவது குருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள். இவர்கள் தம் வாழ்வியலில் மேற்கொண்டருளிய அனுபவங்களைச் சிவஞானசித்தியாரில்,

" ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனல் இரங்குவான் பணி அறங்கள் "

எனக்கூறியருள்கின்றார்கள். இவ்வனுபவஉரைகள் அறம்செய்வார்க்கு இலக்கணமாக அமைகின்றது. இவ்விலக்கணம்அனைத்திற்கும் இலக்கியமாக விளங்கியவர்கள் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள். சைவ சந்தானசாரியர்களில் ஒருவராய் விளங்கும் ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகளின் இவ் அனுபஇவலக்கணங்கள், அவர்கள் திருமரபில் அருளுபதேசம் பெற்ற ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி சுவாமிகளிடமும் அப்படியே அமைந்து விளங்குவது திருவருட் பொருத்தமாகும்.

## அறம் பலசெய்த அண்ணல் :

அறம் செய்யப் பொருள் தேவை. பொருட் செலவுதான் அறமாகிறது; இது உலக இயற்கை. அங்ஙனம் அன்றி முதல் வளர அறமும் வளர வழிவகுத்தவர்கள் நமது சுவாமிகள். அறக்கட்டளையின் நோக்கம் என்ன? பொருள் அறவழி ஈட்டிய பொருள். குமரகுருபரசுவாமிகள், திருவருளை முன்வைத்துப் புறச்சமயத்தார் மனத்தைத் திருந்தச்செய்து, சிவதர்மத்திற்காகவே பொருளீட்டியவர்கள். அந்தப்பொருள் - முதல் அணுவளவும் அழியக்கூடாது; அதன் நியாய வட்டியாகிய ஊதியத்தி விருந்து அறம் வளரவேண்டும் என்ற அடிப்படையில் இவர்களுடைய அறக்கட்டளைகள் அனைத்தும் செல்லுகின்றன. வித்தின்றி விளைவு செய்பவன் இறைவன். இரண்டுபடி நெல்லைக் கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் செய்தாள் அவன் சத்தியாகிய காமாட்சி. அவரைப்போலச் சிறிய முதலைவைத்து இவர்கள் ஆட்சி தொடங்கிய காலம் முதல் வளர்ந்த அறங்களின் வளத்தை இமயம் முதல் கன்னியாகுமரிவரை உள்ள சிவத் தலங்கள் அறிவிக்கும்.

## வள்வன்மை :

ஸ்ரீ குமரகுருபரர் திருவருள் துணையால் தோன்றியவர், செந்தில் ஆண்டவன் திருவருளால் செந்தமிழ் கற்றவர். அவருடைய இளம்பருவத்து ஒவ்வோர் அடிவைப்பும், திருவருள் துணையால் நிகழ்ந்தனவே. அன்னை மீனாட்சியே பிள்ளைக்கவி கேட்டுப் பெரும்பரிசு கொடுத்தார் என்றால், இவர்களுடைய

அருள்வளர்ச்சி எத்தகையது? அவர்களுக்குப் பிறகு சற்றேறக் குறைய 300 ஆண்டுகளுக்குப் பின்னர் ஸ்ரீ காசிமடத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள். சுவாமிகள், அரியநாயகிபுரத்தில் தோன்றி மதுரை யில் சிலநாள் இருந்து தருமைவந்து உபதேசம்பெற்று, ஸ்ரீகாசி மடத்திற்குச் சென்று வாழ்நாளில் பெரும்பகுதி ஸ்ரீ காசியிலேயே இருந்து காசிச் சுவாமிகளாய், ஸ்ரீ குமரகுருபரரைப்போலவே ஸ்ரீ காசியிலேயே பரிபூரணமாகி கங்கையிலே கலந்தார்கள். ஆகவே இவர்கள் வாழ்வும் ஸ்ரீ குமரகுருபரர் வாழ்வும் முழுவதும் ஒத்தன.

## குருபக்தி

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் காசியிலேயே வாழ்ந்தாலும், பல தலங்களுக்குச் சென்றாலும் அடிக்கடி குரு தரிசனம் செய்வதில் பெருவிருப்பமுடையவர்கள் என்பதை அவர்கள் வரலாறு காட்டும். அங்ஙனமே, அவர்கட்குப் பின்னர் வந்த காசிவாசி சுவாமிகள், இரும்பு எப்போதும் காந்தத்தின்முன் இருந்தால்தான் காந்தச் சக்தியை எய்தி தன்மயமாய் இருக்கும் என்பதை திருவுள்ளத்து அடைத்து இடைவிடாத குருதரிசனம் ஒன்றை குறிக்கோளாகக் கொண்டு திருப்பனந்தாளிலேயே ஸ்ரீ காசி மடத்தை அமைத்து அருளாட்சி நடத்திவந்தார்கள்.

## அந்தக்காலத்திலேயே

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களிடம் ஞானதீட்சை பெற்ற திருக்கூட்டத்து அடியவர் ஒருவரே திருப் பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுவருவது மரபு. தருமை ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களில் ஒருவ ராகிய இவர்களிடம் அக்காலத்திலேயே பல சிறந்த பண்புகள் காணப்பட்டன. இவர்கள் திருக்கடவூர், திருபுவனம், திருநள் ளாறு, திருவையாறு முதலான தலங்களில் கட்டளை சுவாமிகளாக இருந்தார்கள். அப்போது நிர்வாக நேரம்போக ஏனைய நேரங் களில் திருமுறைப் பாராயணம், சிவபுராண படனம் முதலிய நற்சிந்தனை செய்து வருவார்கள். பெரியபுராணத்தில் இவர் களுக்கு இணையிடில்லாத அன்பு. அதில் கூறப்பெற்றிருப்பது போல எல்லாத் தொண்டும், எல்லாத் தொண்டரும்போலத் தாமும் ஆகவேண்டும் என்ற பெருமுயற்சி. அந்நிலையில், தமக்கு வரும் படித்தரங்களில் சிக்கனமாக உயிர்வாழ்வுக்குத்தக உடல் வளர்க்கவேண்டியதற்குச் செலவழித்தது போக மிகுதி

யைப் பல்வகை அறங்களாகச் செய்துவந்தார்கள். அதிலும் பிறரறியாமல் கடமையுணர்ச்சியாகச் செய்துவந்தார்கள்.

## முற்றந்தே விடுவது முதல்வன் இயல்பு :

அன்னை ஸ்ரீ அபிராமி உடனுறை ஸ்ரீ அமுதகடேசப்பெருமான் இவ்வண்ணம் பிறரறியாமல் பதிபுண்ணியம் பசு புண்ணியம் செய்பவர்களை உயர்த்தத்திருவுளங் கொண்டான். நிர்வாகப் பொறுப்பு குறைவாகவும், நேர்மையும் பணியும் சிறப்பாகவும் கொண்ட நிலையத்தில் நிலைபெறுத்த எண்ணினன். பிறரறியாமல் தெய்விக வாழ்வு வாழ்ந்த இவர்களைக் காசிமடத்துப் பொறுப்பை ஏற்கச் செய்தான். அன்னைஅபிராமி தான் வளர்த்த 32அறங்களையும் காலநிலைக்கும், சமுதாய நிலைக்கும் ஏற்ப நடத்தும்படி பணித்தாள். அன்னையின் அருளால் பலநூறு அறக்கட்டளைகள் அமைந்தன. ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தி சுவாமிகள் அறம்வளர்த்த நாதரானார்கள்.

## குமரகுருபரரிடம் குறையா அன்பு :

ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளிடம் என்றும் நீங்காத மாறாத அன்பு இவர்களுக்கு இருந்தமையால் அவர்கள் பெயரால் பல அறக்கட்டளைகளை இவர்கள் ஆற்றினர்கள். ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் பெயர், கலைக் கழகங்கள், கல்விக் கூடங்கள், அன்னசாலைகள், பரிசு நிதிகள், திருமுறைப் பாராயணங்கள், திருமுறைக்கல்வெட்டுக்கள், நூல்வெளியீடுகள்வாயிலாக எங்கும் பரவிற்று. அப்பர் பெயரை நிலைநாட்டிய அப்பூதியார்போல் குமரகுருபர சுவாமிகள் பெயரை இருபதாம் நூற்றாண்டில் விளக்கம் கண்டவர்கள் இவர்கள் என்றால் அது மிகையாகாது.

## அவதார ஸ்தலம் :

ஸ்ரீ குமரகுருபரரிடம் உள்ள அன்புக்கு ஓர் எல்லை அவர்கள் அவதரித்த இடத்தை என்றும் விளங்கச் செய்தது. புறப்புறச் சமயத்தாரும் கூட அவரவர்கள் குருநாதர் பிறந்த இடத்தை விளக்கம் காணும்போது, நாம் ஏன் நமது குமரகுருபரர் அவதார ஸ்தலத்தை விளக்கம் காணல் கூடாது என்ற திருவருள் தேன் திருவுள்ளத் தாமரையில் ஒருகாலத்துச் சுரந்திருக்கிறது. அதனால் ஸ்ரீ குமரகுருபரர் அவதரித்த ஸ்ரீவைகுண்டத்திலே, கைலாசபுரத்திலே அவர்கள் அவதரித்த இடத்தைத் திருக்கோயிலாகக் கட்டினர்கள். அறிவுத் தெய்வமும், கலைத்தெய்வமும் விளங்கக் கலைக் கல்லூரி, அச்சகம், நூலகம், பத்திரிகைமுதலான

வற்றை ஏற்படுத்தினார்கள். நினைவு நாள் நீங்காதிருக்க ஆண்டாண்டுதோறும் அன்னம் பாலிப்புக்களும் அருளியிருக்கிறார்கள். இது இவர்கள் செய்த தொண்டுகளில் தலையாயபணி.

## எவர்க்கும் கிட்டாத பேறு :

இவர்கள் 23வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகளால் செந்தமிழ்க் கூடலிலே ஆட்கொள்ளப் பெற்றவர்கள். சீலத்தாலும் கோலத்தாலும் சிவ சிந்தனையாலும் உள்ளத்துறவாலும் சிறந்த இவர்கள் 24வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் முதல் 26வது பட்டம் வரையில் மூன்று குருநாதர்களுக்கு ஞானாபிஷேகம் செய்யத் துணை நின்றார்கள். இப் பேற்றினை ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமான் இவர்களுக்கு வழங்கினார்கள் என்றால் இந்தப்பேறு யாருக்குக் கிட்டும் !!

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் கயிலாயப் பேரொளி தீண்டிய திருமேனி படைத்தவர்கள் என்பதை உலகம்நன்கறியும். அவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்விக்கும் பெரும் பேறு பிறர் எவர்க்கும் கிடைக்காத ஒன்றன்றோ ? அது இவர்களுக்குத் தான் கிட்டியது.

25வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் காசியிலேயே பரிபூரணம் எய்தியமையால் 26வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்கு ஞானாபிஷேகம் செய்யத் துணைநின்று ஆதீன மரபைக்காத்த பெருமை இவர்களுக்கு உரியது. இங்ஙனம் முனிவர் பெருந்தகையாகிய இவர்கள் துறவரசுகளைப் போற்றிப் பணிந்து சிவப்பணியில் தலைசிறந்து விளங்கினார்கள்.

## தூய உள்ளம் :

ஐம்பொறிகளாகிய யானைகளையும் அறிவு என்ற அங்குசத்தால் அடக்கி மனக்கோயிலிலே சிவச்சோதியை எழுந்தருள வைத்து எப்போதும் வழிபடுகின்ற இவர்களுக்கு "தொண்டர் அஞ்சுகளிறும் அடக்கி" என்ற திருமுறைப்பாடலில் அழுத்தமான பிணைப்பு. அடிக்கடி அதனையே பாடிப்பாடி அகங்குளிர்ந்து அனுபவிப்பார்கள். அதனால் அப்பாடலைப் பெற்ற திருக்கேதாரத்திலே மிகுந்த ஈடுபாடு. ஆண்டு தவறினாலும் அவர்கள் திருக்கேதாரம் போகத் தவறுவதில்லை. தம் குருநாதராகிய கயிலைக் குருமணி அவர்கள் கேதாரநாதர் திருவருளைப்

பெறவேண்டும் என்ற பெருவிருப்பால் முதன்முதல் அவர்களை யும் அழைத்துச் சென்று வழிபடச்செய்து அவர்கள் வாயிலாகவும் திருவருளைப் பெற்று உய்ந்தார்கள். ஜோதிர்லிங்க ஸ்தலங் களுக்கும் சென்று வழிபட்டு வந்தார்கள். இவர்கள் வாழ்க்கையில் கண்ட சிறந்த காட்சி இறைவன் வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத்தகத்தான் என்பதே. எங்குமாய் யாவையுமாய் நீக்கமற நிறைந்திருக்கிற கடவுளைக் கண்டு காட்டிய தவமுனிவர் இவர்களே.

**சிவசிவ :**

'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' 'தூண்டாச்சுடர்விளக்காய் நின்றாய் நீயே' என்பது கயிலை கண்ட அப்பர் சுவாமிகள் திருவாக்கு. அதனை அடிக்கடி பாடி மகிழும் சுவாமிகள் பிறர்க் கும் காட்டத் திருவுளங் கொண்டார்கள். திருமுறைப் பண் ணிசை வாணர்களை ஆங்காங்கு அமர்த்திச் சிவ ஒலியை எழுப்பி மக்களுடைய செவி வழியாக சிந்தையில் திருமுறை ஒலியைத் திகழச் செய்தார்கள். சிவத்தை மக்கள் அனைவரும் கண்ணாலும் காண வேண்டும் என்ற கருத்தால் சிவ சிவ ஒளியை எங்கும் திகழ வைத்தார்கள். சிவப்பு ஒளி சிவம். நீல ஒளி அம்மை என்ற அதன் பொருளையும் விளக்கினார்கள். சிவமும், சக்தியும் சொல்லும் பொருளுமாகப் பிரிப்பற நிற்கும் பெற்றியைத் தெரிவித்தருளினார்கள்.

**பரிபூரணம் :**

"காசியில் இறத்தல் நேர்படின் அல்லது
செயற்கையின் எய்தும் இயற்கைத்து அன்றே"

என்று குமரகுருபரர் அருளினார்கள். ஒரே யாத்திரையில் ஸ்ரீ இராம்நாதரை வழிபட்டு இடையிலே தங்காமல் காசிக்குச் சென்று சில நாட்களில் பரிபூரணம் எய்துதல் என்பது, யாரும் எண்ணிப்பார்க்க இயலாத அருஞ்செயல். அதிலும் குருவாரப்; நீரால் விளக்கெரித்த நமிநந்தி அடிகள் திருநட்சத்திரம் சேக்கிழார் திருநட்சத்திரம் கூடிய பெருநாள் இவர்களுக்கு வாய்த்தது. இவர்கள் ஆன்மா சிவத்தோடு இரண்டறக்கலந்தது.

**ஆன்மா மட்டுமா ? :**

இவர்கள் தம் திருமேனியைத் தொண்டாலும் தியாகத்தா லும் தியானத்தாலும் திருமுறைப் பண்களை இசைத்து இசைத்து

உருகிய பண்பாலும் பழுத்து கனிந்து சிவத்திருமேனியாகச் செய்துகொண்டவர்கள். அத்தகைய இவர்கள் உடல் அன்னை பராசக்தியின் அருளேயான கங்கை நீரிற் கலந்தது சிவமே ஆன உடல் அருள் வடிவாகிய கங்கையிற் கலந்தது. உடையா னாகிய சிவனும் உடைமையாகிய அருளும் கலந்த கலப்பு - பிரிக்க முடியாத கலப்பு ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தி சுவாமிகளின் பரிபூரணக் கலப்பு எனலாம். அவர்கள் என்றும் விளங்கிக் கொண்டிருக் கிறார்கள்.

அவர்களுக்குப் பின் :

தருமபுர ஆதீனத்துத் தொண்டர் குழாத்துள் சொக்கத் தங்கமாய் விளங்கியவர்கள் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள், சொக்கத் தங்கமாக மட்டுமின்றி சொக்கர் தங்கமாகவும் விளங்கியவர்கள். மெய்ஞ்ஞானியாகிய ஜனகன் யாக்ஞ்ய வல்க்யரைப் பன்னிரண்டாண்டு பதம் பார்த்து மணவர் ஆக்கிக்கொண்டார் என்பது உபநிஷத்து வரலாறு. ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சொக்கத் தங்கமாகிய ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமி களைத் தமது அருகிலேயே இருத்தி பழுக்கக் காய்ச்சிப் பதப்படுத் தித் தமது பொறுப்பில் அமர்த்தி இருக்கிறார்கள். அதனால், அந்நிகழ்ச்சிசெந்தமிழ் மக்களுக்குச் சிந்தை நிறைந்தமகிழ்ச்சியை விளைவித்திருக்கிறது.

காசிவாசி ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசாமித் தம்பிரான்சுவாமிகள் அவர்களும், ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளின் அருள் நோக்கின்படி ஆலவாய்ச் சொக்கனையும், தருமைவாழ் ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமானையும் குருமரபையும் போற்றி சிந்தைதனில் இடையறா அன்போடும், நடையறாப் பெருந்துற வோடும் அருளாட்சியைச் செலுத்துவார்கள் என்பது உறுதி. இவர்கள் ஆட்சியில் சிவப்பணி சிறந்து விளங்க ஆலவாய்ச் சொக்கன் அருள் புரிவாராக.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் நினைவு மலராக இவ்விதழ் வெளிவருகின்றது. இதனை அன்பர் கள் படித்துப் பயனுறுக.

" ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்லாங் கல்வி கேள்வியல்லல்
ஒய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர காசன்மெய்த்தொண்டர்களே"

உ

குருபாதம்

தருமையாதீனம் தருமபுரம் – மாயூரம் P. O.

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த 22—5—1972

பரமாசாரிய சுவாமிகள்

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

அருளுடைச் சுடராய், அளிந்ததோர் கனியாய், பெருந்திறல் அருந்தவர்க்கரசாய், பொருளுடைக் கலையாய், புகழ்ச்சியைக் கடந்த போகமாய், யோகத்தின் பொலிவாய், தெருளிடத்து அடியார் சிந்தையுள் புகுந்த செல்வமாய், சிவமாய் விளங்கியவர்கள் நமது கண்மணியிற் சிறந்த நன்மணியாகிய காசிவாசி அருணந்தித் தம்பிரான் அவர்கள்.

அவர்கள், குமரகுருபரர்க்குத் திருமலைநாயக்க மன்னனால் முற்றூட்டாக வழங்கப்பெற்ற அரியநாயகிபுரத்தில் தோன்றியவர்கள். இளமையிலேயே ஆங்கிலமும், அருந்தமிழும் கற்றுத் தேர்ந்தவர்கள். தீந்தமிழ்த் தேவாரப் பாடல்களை நாளும் இன்னிசையால் பாடிப் பரவி மகிழ்ந்தவர்கள். தருமையாதீனம் இருபத்துமூன்றுவது குருமகாசந்நிதானத்தினிடத்தில் துறவறம் பெற்றவர்கள். ஆதீனத்தைச்சேர்ந்த திருக்கடவூர், திருவையாறு, திருநள்ளாறு, திருபுவனம், திருவாரூர் இராஜன்கட்டளை ஆகிய ஆலயங்களில் கட்டளை விசாரணையாகப் பணியாற்றிய பண்பு மிக்கவர்கள். ஆதீனத்தில் மிகப் பெருஞ் சிறப்புடன் நடத்தப் பெற்ற மெய்கண்டான் சித்தாந்த மாநாடு, பத்தாண்டு ஆட்சி விழாப் போன்ற பெரிய சமய மாநாடுகளில் பெரும் பங்கு கொண்டு பணியாற்றிய சிறப்புக்குரியவர்கள். குருபக்தி மிக்கவர்கள். தருமைக் குருமூர்த்திகளை நனவிலும், கனவிலும், வாழ்விலும் மறவாது போற்றும் மாண்புடையவர்கள்.

கிடந்தாலும் ஞானப்ரகாசனென் பேன்கிடந்தே எழுந்து
படர்ந்தாலும் ஞானப்ரகாசனென் பேன்பசியோடு பிணி
அடர்ந்தாலும் ஞானப்ரகாசனென் பேன்அந்த அந்தகனுர்
தொடர்ந்தாலும் ஞானப்ரகாசனென் பேன்பினைச்சொல்இல்லையே

என்ற ஞானப்பிரகாச மாலை பாடலுக்கு இலக்கியமாய்த் திகழ்ந்தவர்கள்.

---

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் நினைவு மலருக்கு வழங்கிய ஆசியுரை.

காரே சுமந்த கிரிமீது நின்று கடுங்கனலில்
நேரே அருந்தவஞ் செய்வீர் கமலையன் நெஞ்சிலன்பர்
ஆரேனும் ஆள்பவன் ஞானப்ரகாசன் அடியரெனும்
பேரே படைமின் அதுபோதும் போதும்பிறப்பறவே

என்ற இப் பாடலைப் பலருக்கும் அறிவுறுத்திப் பலரைப் பண் படுத்தியவர்கள். "ஞானப்ரகாசன் பயின்மடத்தில் கெவுளி உரைக்கும் பதி பசு பாசத்தின் கேள்விகளே" என்ற பாடற் பகுதியை அன்பர்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தி முப்பொருள் உண்மையை வற்புறுத்தியவர்கள். தருமையாதீனத்தின் இருபத்து நான்கு, இருபத்தைந்து, இருபத்தாறு ஆகிய மகாசந்நிதானங் கள் ஞானபீடம் ஏறுவதற்குத் துணை நின்றவர்கள்.

சிவதல யாத்திரையில் விருப்பம் மிக்கவர்கள். திருக்கேதாரத் தலத்தில் மிகுதியான ஈடுபாடு உடையவர்கள். ஆண்டிற்கு ஒரு முறை, இருமுறை சென்று தரிசித்து மகிழ்பவர்கள். தாம் கண்ட கேதார யாத்திரையின் அருளனுபவத்தை, நமது குருமூர்த்தி களாகிய கயிலைக் குருமணியிடத்தில் அடிக்கடி தெரிவித்து, கேதார யாத்திரை, அமரநாதயாத்திரை, பசுபதிநாதயாத்திரை, கயிலாய யாத்திரை முதலியவற்றைச் செய்யத் தூண்டியவர்கள். கயிலையைத் தரிசித்த நம் குருமணிகளை, கயிலைக் குருமணி என்று முதன்முதலாக அழைத்தவர்கள். பக்தர்களின் சார்பில் தமது திருக்கரத்தாலேயே கயிலைக் குருமணிக்குக் கனகாபிஷேகம் செய்து மகிழ்ந்தவர்கள்.

பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து பரமற்கே ஆளானவர்கள். "குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு உற்றார்யார்" "நன்றுங் கால் நல்லவாக் காண்பவர் அன்றுங்கால், அல்லற்படுவதெவன்", "அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்", "பரபரக்கவேண்டா பலகாலும் சொன்னேன்" என்ற இப் பாடல்களை நாளும் சிந்தித் தும் பிறர்க்கு அறிவுறுத்தியும் அவ்வழி நின்றவர்கள். இடை யறாப் பேரன்பும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும் நடையறாப் பெருந்துறவும், சிவவேடப் பொலிவழகும் கொண்டு திகழ்ந்தவர்கள். குமரி முதல் இமயம் வரையுள்ள புனிதத் தலங் களில் ஒரு கோடி ரூபாய்க்குமேல் மூலதனம் வைத்து ஐந்நூற்று முப்பத்திமூன்று அறக்கட்டளைகள் நிறுவிய அருளாளர்.

காசிவாசி என்பதற்கேற்ப, பெரும்பகுதி ஸ்ரீ காசியில் வாசம் செய்தவர்கள். காசிவாசியாக வந்தவர்களில் ஸ்ரீகாசியில் முத்திப் பேறெய்தியவர்கள், ஸ்ரீ குமரகுருபரர் முதல் சடையப்ப முனிவர் வரை ஐவராவர். பல்லாண்டுகளுக்குப்பிறகு அப்பெரும்பேற்றை

ஸ்ரீ காசியில் பெற்றவர்கள் இவர்கள். அந்தப் புனித உடல் ஸ்ரீ காசி கங்கையில் ஜலசமாதி பெற்றதும் ஆருவதாக இவர் களுக்கே கிடைத்தது தனிச் சிறப்புக்குரியது. அவர்களது குரு பக்தி விசேஷத்தால் கயிலைக்குருமணி முத்தி அடைந்த ஆருவது மாதத்தில், கயிலைக் குருமணி முத்திப்பேறெய்திய அதேகாசித் தலத்திலேயே முத்தி எய்திய ஒருமைப்பாடு உடையவர்கள். தமது கருத்திற்கிசைய ஒழுகும் உள்ளப்பாங்கும், தமது கருத்தறிந்து முடிக்கத்தக்க ஆற்றலும், தம்மால் நியமிக்கப்பட்ட அறங்கள் பலவற்றையும் திறம்பட நடாத்தும் திறனும், இனிய எளிய பண்பும், செந்தமிழ்ப் புலமையும், ஆங்கில அறிவும், சிவ நெறிப் பற்றும் உடைய நமது கண்மணியிற் சிறந்த நன்மணி யாகிய காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்களைத் தமக்கு வாரிசாக நியமித்துக்கொண்ட வள்ளன்மை உடையவர் கள். அருணந்தித் தம்பிரான் அவர்களின் பிரிவு சைவநெறிக்கு நிறைவு செய்ய முடியாத குறைவேயாம். ஆயினும், அவர்களது உள்ளப்பாங்கு அறிந்து ஒழுகும் காசிவாசிமுத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள் அக்குறையை நிறைவுசெய்வார்கள் என்பது உறுதி. இவர்கள் வாழையடி வாழையென வந்த சமய நன்மரபு களைப் பல்லாண்டு காத்து, சமயத்திற்கும், சமுதாயத்திற்கும், தாய்மொழிக்கும், நாட்டிற்கும் நல்லன எல்லாம் செய்து நீடு வாழ ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

---

[ 388ம் பக்கத் தொடர்ச்சி ]

பின்னர், மன்னன் ஞானேபதேசஞ் செய்த ஆசாரியனுக்கு குரு தட்சிணை வழங்கல் வேண்டும். அந்தணர்கட்கு அன்ன தானஞ் செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்வதால் நோய் விலகும்; செல்வம் பெருகும்; கீர்த்தி ஓங்கும்; காலமழை தவருது பெய்யும்.

சிவஞானதானஞ் செய்தோரும் புட்பக விமானத்தில் ஏறிச் சிவலோகம் சென்று எழுத்துக்காயிரம் பிரமகற்ப காலம் சாலோ கம் பெறுவார்கள்.

சிவஞானப் பெருநூல்களைச் சேமித்துப் பாதுகாத்தோர் அனைவரும் உளமூறிப் பெருமகிழ்ச்சியோடு வாழ்வர். சிவாகமங் களையும் திருமுறைகளையும் ஓதுகின்றவர்கட்கு ஆடையளித்தார் என்ஞான்றும் வள்ளல்களாக விளங்கும் பெருஞ் செல்வம் பெறுவர். முருகப் பெருமான் சிவஞானதானம்செய்யும் விதிகளை யுணர்த்திப் பின், சிவாச்சிரமங்களாகிய மடம், கோயில் அமைக்கு முறைகளை அறிவிக்கத் தொடங்குகிருர். (தொடரும்)

உ
ஓம் சிவாய நம:

# ஸ்ரீ காசியில் முக்தியடைந்த ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தி முனிபுங்கவர்

K. SUBRAMANIAN MADRAS-5

13—3—72லயன்று சென்னையிலிருந்து காசிக்குப் புறப்பட்ட ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களை வழியனுப்பும் பேறு பெற்றேன். ஒரு வாரம் பின்னர்ப் புறப்படவேண்டியவர்கள் முன்னதாகவே புறப்பட்டது ஒரு வியப்பாகவே இருந்தது. திருவருட் குறிப்பு இருந்திருக்க வேண்டுமென்று இப்பொழுது தோன்றுகிறது. காசிக்கு எழுந்தருளியபின் தகவல்கள் பெற்றேன். ஆனால் சில குறிப்புக்களிலிருந்து அவர்கள் ஓரளவு பலஹீனமாக இருக்கக் கூடுமென்று தெரிந்தது. அவர்களைத் தரிசிக்க மனம் விழைந்தது. திருவருள் கூட்டுவித்த வண்ணம் 17—5—72 மாலை காசி சென்று அவர்களைத் தரிசித்தேன் உணர்ச்சி ததும்பும் வகையில் அருள் நோக்குடன் பார்த்தார்கள். பேசவியலாத நிலையிலிருந்தார்கள். உடனடியாக அபாயநிலை ஏதுமில்லையென்று டாக்டர்கள் சொன்னது ஆறுதலாக இருந்தும், எனக்கும் காசியில் அயரா வுழைப்புடன் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளைக் காத்துவந்த ஸ்ரீ கல்யாண சுந்தரம் பிள்ளைக்கும் மனக் கலக்கம் ஏற்பட்டது. 18—5—72 காலையில்கூடக் கொஞ்சம் நிலையில் முன்னேற்றம்போல் தோன்றியது. ஆனால் மாலை 6 மணியளவில் பரிபூரணம் எய்தினார்கள். குருவாரமும் சஷ்டியும் சேக்கிழார் பெருமான் திருநக்ஷத்திரமும் சேர்ந்து அமைந்தன.

ஒரு ஞானப் பேரொளியை இழந்து விட்டோமே என்று விம்மினோம். கிடைத்தற்கரிய "சாது மஹாத்மா" என்று சொல்லிக்கொண்டே காசிமாநகர் வாசிகள் தொடர்ந்துவந்து இறுதி மரியாதையைச் செலுத்தினார்கள். சில சந்நியாசிகளும் அஞ்சலி செலுத்தினர். கேதாரகட்டத்தில் வசித்த அனைவரும் சுவாமிகள் அவர்களை நன்கு தெரிந்துகொண்டவர்கள், அவர்களுடைய வழிபாடு, சிந்தனை, அறச்செயல்கள், தண்ணளி, சிவவொலி பரப்பும் சிறந்த முறை இவையனைத்தையும் தெரிந்து கொண்ட சீரடியார்களாக வந்தவர்கள் தம் ஈடுபாட்டைப் புலப் படுத்தினர்.

இவர்களுக்குக் காசியில் முக்தியன்றிக் காசினியில் வேறு எவர்க்குத்தான் தகும் என்று கூறினர் பலர். வருடத்தில் 6 மாதம்

காசிவாசியாகவே யிருந்தார்களல்லவா என்றனர் சிலர். இத்தகைய காட்சிகளை யெல்லாம் அடியேன் கண்டேன். மாபெருந் தலைவரை இழந்துவிட்டோமே என்ற எண்ணமே நிலை பெற்றது. இறுதி யஞ்சலி செய்ய இறைவன் கூட்டிவைத்தானே என்று ஆறுதல் அடைந்தேன்.

சுவாமிகள் அவர்களைப் பற்றி எல்லோரும் அறிவர். அவர்களால் நன்மை யடையாதவர்கள் இல்லை யென்றே சொல்லலாம். எத்தனை ஆலயங்களில் "சிவ சிவ" மின் விளக்குகள் பொருத்தியுள்ளார்கள். தெரியாதவர்கள்கூட அதைப் படித்துச் சிவநாம பாராயணம் செய்து நற்பண்பு எய்தி வருகிறார்கள். திருமுறை நூல்களை நிரம்பப் பதிப்பிக்கச்செய்து இலவசமாகவும், சகாய விலையிலும் அளிக்கச்செய்து சைவ உலகில் அனைவரும் அவற்றை வாங்கிப் படித்து இம்மை மறுமைப் பயன்களை அடையும்படி செய்துள்ளார்கள். முக்கியமாகத் திருமுறை வாணர்கள் (ஓதுவாமூர்த்திகள்) வளர்ச்சிக்குப் பேரூக்கம் அளித்தவர்கள் இவர்களே. பல தலங்களில் அகண்ட பாராயணத்திற்குத் திட்டங்கள் ஏற்படுத்தி அந்தந்த ஊர்களில் இரவெல்லாம் ஈடுபட்டு நற்பயனடையச் செய்துள்ளார்கள்.

சுவாமிகள் அருளாட்சிக் காலம் முழுவதும் அடியேன்பெற்ற பேரனுபவங்கள் பற்பல. தொண்டை நாட்டுத் தலங்களுக்கு எழுந்தருளும்பொழுது அடியேனையும் அழைத்துச் செல்வார்கள். யாவரும் தம்மை அறியாவண்ணம் வழிபாடுகள் செய்வார்கள். அந்தத் தலத்தில் முக்கியமாக நிகழும் ஆராதனைச் சிறப்புக் குறைவிருப்பின் வினவி யறிந்து, அதனைக் குறைவின்றி நடத்த ஒரு பேரறக் கட்டளையை விரைவில் அமைத்துவிடுவார்கள். விடுபட்டிருந்த திட்டங்கள் மீண்டும் இவர்களால் பலவகையில் பெருக்கமடைந்தன.

எவரையும் மனம் நோகும்படி செய்யமாட்டார்கள்; ஆனால் தவற்றை உணரும்படி செய்வார்கள்.

ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள்மீது அளவுகடந்த பக்திகொண்டவர்கள். தாம் செய்த ஒவ்வொரு தொண்டையும் அவர்கள் (குமரகுருபரர்) தொண்டாகவே பாவித்து அவர்களுடைய புகழைப் பலவிதங்களில் பரப்பி வந்தார்கள். அவர்களியற்றிய பிரபந்தங்களை யெல்லாம் தொகுத்தும் தனியாகவும் அச்சடித்து வழங்கச் செய்தார்கள். சிறப்பாக அவர்கள் பெயரில் ஸ்ரீவைகுண்டத்தில் கல்லூரி நிறுவியது பெரிய சாதனையாகும்.

"தொழுது தூமலர் தூவி........................எழுதும் கீழ்க் கணக்கு இன்னம்பர் ஈசனே" என்ற தேவாரத்தை அடிக்கடி சொல்லி நம் செய்கை ஆண்டவனிடத்தில் ஒப்புவிக்கப்பெறும் நல்ல கணக்காக இருக்கவேண்டுமென்பதை வலியுறுத்து வார்கள்.

நாயன்மார்களை யொத்தவகையில் செயற்கரிய அறப்பணி களை யெல்லாம் உள்ளன்போடு மனமுவந்து செய்துவந்தார்கள். அதனை மெய்ப்பித்த வகையிலேயே சேக்கிழார் பெருமான் திரு நட்சத்திர நாளில் புகழுடம்பெய்தினார்கள் போலும்!

புகழுடம்பெய்திய இவர்கள் புண்ணியத் திருமேனி என்றும் நம் போன்றவர்களுக்கு வானுலகினின்று என்றும்போல் அருள் ஆசி புரிய இறைவன் திருவருளைச் சிந்திப்போமாக.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் ஆற்றிய மாபெருந்தொண்டு, தாம் புரிந்துவந்த அறப்பணிகளைச் செவ்வனே பரிபாலிக்கத் தக்கவரை இளவரசாக நியமித்தமையாகும். இது எண்ணி யெண்ணி இன்புறற்பாலது. அவர்கள் அருளாசியின் வண்ணம் எல்லாப் பணிகளையும் திறம்பட அமைத்து நடத்திவரும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரானவர்கள் இப்பொழுது காசிவாசி என்ற அணிகலன் பூண்டு ஸ்ரீ காசிமடத்தின் ஆட்சிப் பீடத்தை அலங்கரித்து வருகிறார்கள். அவர்கள் செய்துவரும் சிவபூசாபலனே இந்தப் பீடத்திற்கு அவர்களை உயர்த்தியது என ஒரு பெரியார் சொன்னது நினைவுக்குவருகிறது.

ஸ்ரீ காசிமடத்துப் புகழ் வாழ்க!

அதிபர்கள் புகழ் வாழ்க!

வாழ்கசீரடியாரெல்லாம்!

ஓம் சிவாய நம.

# குருபூசை

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்.
திரு. ச. தண்டபாணி தேசிகர்

குரு பரிபூரணம் எய்திய நாளில் இயற்றப்பெறும் பூசையன்று இது. குரு சிவோகம் பாவனையிலிருந்து சிவாகமங்களை மாணுக்கனுக்கு உபதேசிக்கத் திருவுளங்கொண்டிருக்கிற வேளையிலே சிவஞானதானத்தைப் பெறுகின்ற மாணுக்கன் செய்கின்ற வழிபாட்டு முறைகளாம் சிவதருமோத்தரம் ஈண்டுக் கூறுகின்ற குருபூசை.

## எல்லாஞ் சமம் :

பரமகருணுநிதியாகிய சிவனும், நம்மீது வைத்த கருணையால் எழுந்தருளிவந்த குருவும், அவராற் சொல்லப்படுகின்ற சிவ ஞானமும் ஏற்றத்தாழ்வற்றவர்கள். பெருமையால் ஒத்தவர்கள் ; சிவனுக்கு எவ்வளவு பெருமையுண்டோ அவ்வளவு பெருமை யுண்டு குருவுக்கும் - அவரருளிச்செய்கின்ற உபதேசமொழிகட்கும். ஆகவே இம்மூவர்க்கும் பூசைசெய்து வழிபடுதலை மாணுக்கன் நியமமாகக் கொள்ளக்கடவன். குருபூசை ஒன்ருலேயே மாணுக்கனுடைய மலம் நாசமாக்கப்பெறுகின்றது. சிவஞானம் ஒளியூட்டப் பெறுகின்றது.

ஆதலால் குருநாதனை ஒவ்வொருநாளும் சிவனைப் பூசிப்பது போல அகத்தேயும் புறத்தேயும் பூசித்து, வலம்வந்து, வணங்கி, திருமுன்நின்று கைகுவித்து நின்று, தோத்திரம் செய்து, பெருமானே! தாங்கள் அருளிய சிவஞானம் அடியேனிடம் மிகப் பிரகாசித்து ஒவ்வொரு நாளும் வளர்ந்து சிவபோகத்தைத் தந்து வாழ்விப்பதாக, வாய்ப்பேச்சாய்க் கழியாமல் ஒவ்வொரு கணமும் அனுபவமாய் ஆனந்தமாய் அமைவதாக அருள் செய்யவேண்டும் என வேண்டிக்கொள்ளுதல் வேண்டும். அடியேன் என் மாணுக்கர்க்கும் அருளிச்செய்ய அதிகாரமும் வழங்குதல் வேண்டும் என வேண்டுதல் வேண்டும். அவர் அதிகாரம் பெற்று, நல்ல நாளையிலே நல்ல மாணுக்கர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கல் வேண்டும்.

## பாடங்கேட்கு முறை :

மாணுக்கன், சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்பே எழுந்து புண்ணியநீரில் நீராடி, வெண்மையான ஆடையை

உடுத்திக்கொண்டு, வெண்ணீறு அணிந்து, கண்டிகை பூண்டு, சிவத்தியானம் பண்ணி, பூமியின்மேல் பஞ்சாங்க அட்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து, ஆசாரியனையும் முன்போலப் பூசித்துப் பாடஞ் சொல்லுக. அதாவது சிவஞானதானம் அருளுக.

விரையாது, வெகுளாது, அன்பேயுருவாய்; ஒருநாளைக்கு நான்கு கவிகட்கு மேற்படாமல் முறையாகப் பதம்பிரித்தல், பதப் பொருள் விரித்தல், பொழிப்புரைத்தல் விளக்கங் கூறல், ஒப்புக் காட்டல், முதலியவற்றையருளி, அம்மட்டில் நிறுத்தாமல், தான் சொல்வது ஞான சாத்திரமாதலின் கேட்பவர்கட்கும் ஞான அனுபவம் கைவர அந்நிலையில் ஒவ்வொருநாளும் இருந்து காட்டுதலும் வேண்டும்.

கேட்ட மாணக்கன், சொன்ன ஆசாரியரை ஒவ்வொருநாளும் அன்னபானுதிகளாலும், தொண்டுகளாலும் மகிழ்வித்தல் வேண்டும். ஏனைய தவமுனிவர்கட்கும், அந்தணர்க்கும் அன்னம் அளிக்கலாம்.

அறுபதாண்டுகழிந்த கிழவர், பேராசையும் பெரும்பசியும் உடையவர்கள், குழந்தைகள், வறியவர், நோயாளிகள், அநாதைகள், கண்ணிழந்தோர், கைகால் இழந்தோர் முதலியோர்க்கும் அன்னம் அளித்தல் வேண்டும். பின்னர், தன் தாய் தந்தையர் சுற்றத்தாருடன் தான் புசித்தல்வேண்டும். பின்னர் தனதடியார்களை மனமகிழப் புசிப்பித்தல் வேண்டும்.

அன்றிரவு ருத்ரகணமுதல் க்ஷேத்ரபாலர் ஈறுன தெய்வங்கட்குச் சுத்த பலியிடுக. பின்பு பாடம் சொல்லும் ஆசாரியன் பிரமசாரியாயின் உறக்கங்கொள்க. இல்லறத்தானுயின் உறக்கம் ஒழிந்து சிவத்தியானத்தொடு இருக்க.

மறுநாட்காலை, எழுந்து விதிப்படி நீராடிச் சிவபூசையை முடித்துக்கொண்டு இரண்டுமுழ நீள அகலத்தில் ஒரு மண்டபம் அமைத்து, அதனை நாணல், மூங்கில், வெள்ளோலை இவற்றுல் அலங்கரித்து, அதன் நடுவே சரசுவதி பீடத்தையமைத்து, அதிலிருந்து, ஏடு எழுதுவோனை அழைத்து அருகிலிருக்கச்செய்து, அவனையும் பொன் பூஷணமுதலியவற்றுல் மகிழச்செய்து சிவாகமங்களை எழுதச்செய்தல் வேண்டும்.

எழுதிமுடிந்த அளவு, அன்றன்றுடம் வாங்கி ஆசாரியன் உணவின்றி நோன்பிருந்து, சிவபூசை அக்னிகாரியம் முதலியன செய்து, எழுதிய ஏட்டைச் சாந்திகும்பம் வைத்திருக்கும் மண்டபத்திலே அதன் அருகில் வைத்துப் பூசித்துப் பாடஞ்சொல்லத்

தொடங்குதல் வேண்டும். கேட்டு மாணுக்கன் ஆசாரியனைச் சிவனெனவே சிந்தித்து வந்தித்து வாழ்த்திக் கேட்டல் வேண்டும். அம்மண்டபத்தில் தொடக்கரையில் எப்போதும் வேதாகம, தேவார திருவாசக ஒலி இடையருதிருக்கச் செய்தல் அவசியம். பாடந் தொடங்கிய முதல்நாள் இரவு மட்டும் உறங்காமலிருப்பது நலம்.

மறுநாட் காலையிலே அணிசெய்யப்பெற்ற தேரிலே சிவாகமத்தையும் திருமுறைகளையும் எழுந்தருளப்பண்ணி வீதிவலம் வந்து திருக்கோயிலில் எழுந்தருளச் செய்தல் வேண்டும்.

இங்ஙனம் செய்யும் பொருள்வளமில்லாதார் வெண்பட்டாடையால் திருமுறைகளை மூடி மங்கலவாத்தியம் முழங்க வலஞ்செய்வித்து திருக்கோயிலில் எழுந்தருளச்செய்யலாம். இவ்வண்ணம் செய்து, திருக்கோயிலிலே ஆசாரியனையும் எழுந்தருளச்செய்து உபதேசங் கேட்டல் வேண்டும்.

அன்றிரவு அந்தப் பூங்கோயிலின் முன்னே வேதாகம புராணங்கள், திருமுறைகள் முதலியவைகளால் மக்கள் மனம் பரவசமாம்படிப் பாடச் செய்தல் வேண்டும். அதற்குமேல் மக்கள் உறக்கம் போக பக்தியை விளக்கும் நாடகம், தாண்டவம் வாஸ்யம் முதலியவைகளை ஆடச் செய்தல் வேண்டும். அதற்கு மேல் புட்பக விமானத்தில் திவ்யாகமங்களை எழுந்தருளப்பண்ணி மங்கல வாத்யமுழக்கத்துடன் வீதியுலா வரச்செய்தல் வேண்டும்.

அல்லது; ஆகமங்களை ஆனைமீதேற்றி, வெண்பட்டு, வெள்ளைப்பூ, வெள்ளையான ஆபரணங்களால் அலங்கரித்து வீதியுலா வரச்செய்யலாம்.

அப்போது, மன்னன், நேர்த்திசை கோணற்றிசைகளாகிய எட்டுத்திசைகளிலும் பலியிடுவித்து, ஆசாரியனைக் கொண்டு விசேஷ சிவபூசை செய்வித்து, ஊரிலே கொலை களவு முதலிய ஐம்பெரும் பாதகங்கள் நிகழாமல் தடுத்தும், செய்து தண்டனையுற்றவர்களை விடுவித்தும் பெருவிழாக் கொண்டாடி ஆகம உபதேசங் கேட்டல் சாலச்சிறந்தது.

அருந்தவரான சாதகர்கட்கும், புத்திரர்க்கும் சிவஞான தானஞ் செய்யுங்கால் முற்கூறிய விதிப்படி தானஞ் செய்க. மன்னன் முதலிய ஏனையோராயின், சிவஞானதானத்தை; அறவழி யீட்டிய தம் பொருளைக்கொண்டே யியற்றுக.

ஆசாரியன், இங்ஙனம் சிவஞான தானத்தைச் சிறப்புற நடத்திவைத்த சாந்தி கும்பநீரை அரசன் சென்னியில் தெளிக்க. இங்ஙனம் தெளிப்பதால் பாவங்கள் கெடும்.


[ தொடர்ச்சி 382-ஆம் பக்கம் பார்க்க ]

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள்
திருக்கூட்டத்து அடியவர்களுடன் முன்னின்று
ஞானாபிஷேகம் செய்துவைத்தபின்னர்.




தருமை ஆதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள்
வழிபாட்டிற்கு எழுந்தருளல். ( 1971 )

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
ஞானபீடம் ஏறியபின்னர்



திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான்
சுவாமிகட்கு முதன்முதலாக அருட்பூதி அளித்தல்.

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்



திருப்பனந்தாள் காசிமடம்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகட்கும்
அவர்கள்தம் இளவரசு
ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகட்கும்
பொன்னுடைபோர்த்தி ஆசிவழங்குதல்.

சமய விரிவுரை வகுப்புத் தொடக்க விழாவில் : ( 22—5—72 )



புதுவை மாநில ஆளுநர் மாண்புமிகு. திரு. பி. டி. ஜட்டி அவர்கள் தொடங்கிவைத்தபோது தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளாசி வழங்குதல்.

# சமய ஒருமைப்பாடு

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்,

**திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**

'ஒருமைப்பாடு, ஒற்றுமை' என்பன எக்காலத்தும் எங்கும் ஆன்றோர்களால் வலியுறுத்தப்பட்டனவேயாகும்.

"பகையென்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று"

"பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர், நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்"

என்னும் குறட்பாக்கள் அதற்குப் போதிய சான்றாகும். "சுளிக்கச் சொல்லேல், வெட்டெனப் பேசேல், ஞயம்பட உரை" என்பனபோன்ற வாக்கியங்களால் ஔவையார் அறிவுறுத்துவதும் நட்பு அல்லது ஒற்றுமையேயாகும்.

மக்கள் தங்களுக்குள் வேற்றுமையின்றிக் கலந்து வாழ்கின்ற ஒருமைப்பாடு அல்லது ஒற்றுமை என்பதை இங்ஙனம் ஆன்றோர் என்றும் வற்புறுத்தி வந்திருப்பினும், இக்காலத்தில் இது மிகுதியாக எடுத்துப் பேசப்படுகின்றது. அதற்குக் காரணம் இன்று மக்களிடையே இவ்வொருமைப்பாடு குறைந்து, வேறுபாடு மிகுந்திருத்தலேயாகும். இவ்வேறுபாட்டினை நீக்கி ஒருமைப்பாட்டினை நிலைநிறுத்த முயல்கின்றவர்களில் ஒருசிலர், 'வேறுபாட்டை விளைப்பதில் சாதிக்கு அடுத்தது சமயம்' என்று நினைக்கின்றார்கள். அது, பிற சமயங்கட்குப் பொருந்தும் அல்லது பொருந்தாது என்று சொல்ல நமக்கு உரிமையில்லை. ஆயினும், 'சைவ சமயம் யாதொரு சமயத்தையும் வெறுத்து ஒதுக்கும் வேறுபாட்டினை உடையதன்று' என்பதனை நாம் துணிந்து கூறமுடியும்.

பொதுவாகப் பார்க்குமிடத்து எந்தச் சமய ஆசிரியரும் பிற சமயங்களை இகழ்ந்து கூறுதலைத் தம் சமய அறமாகக் கூறுவார் என நினைத்தற்கில்லை. ஏனெனில், யாதொரு சமயத்தைத் தோற்றுவித்தவரும் அதனை நன்மையின் பொருட்டுத் தோற்றுவித்தனரேயன்றித் தீமையின் பொருட்டுத் தோற்றுவித்திலர். சமயங்களைப் பற்றி ஔவையார் முடிவாகச் சொல்லுகின்ற ஒரு வாக்கியம், "எச்சமயத் தோர் சொல்லும்-தீதொழிய நன்மை செயல்" என்பது எனவே, சொல்லும் முறை, சொல்லப்படும் சாதனம் என்பவற்றில் சில வேறுபாடுகள் தோன்றலாம்; அவற்றைப்

பொருட்படுத்தாது, சமயங்களின் குறிக்கோள்களை நோக்கினல், அவை யாவும் நன்மையாகவே இருத்தலை உணர்தல் கூடும். அவ்வாறு உணர்கின்ற எவரும் எந்தச் சமயத்தையும் வேருக நோக்கமாட்டார்கள். எனவே, ஒவ்வொரு சமயத்தில் நிற்பவரும் பிற சமயங்களில் தாம் குறையாக நினைப்பவற்றை விடுத்து, நன்மையாக நினைப்பவற்றை நோக்கி நின்ருல், வேற்றுமை உணர்வு தோன்றக்காரணம் இல்லை.

'யாதொரு சமயமும் நல்லதொரு குறிக்கோளோடே நல்லோரால் தோற்றுவிக்கப்பட்டது' என்பதேயன்றி, 'அல்லோர் சிலர் பிற சமயத்தின்மேல் உள்ள காழ்ப்புக் காரணமாகச் சில சமயங்களைத் தோற்றுவித்தாராயினும், அவற்றைக் கூட எங்கள் சிவபெருமான் ஏற்றுக்கொள்வார்' என்று சைவ சமய ஆசாரியராகிய அப்பர் பெருமான் ஒரு திருப்பாடலில் அருளிச் செய்கின்ருர்.

"விரிவிலா அறிவி னூர்கள் வேருெரு சமயம் செய்தே
எரிவினுல் சொன்ன ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்."

இனிச் சைவசித்தாந்த சாத்திரங்களுள் மிக விரிந்த நூலாகிய சிவஞான சித்தி, சமய உண்மை பற்றிக் கூறும் ஒரு செய்யுள் நன்கு நோக்கத் தக்கது.

"ஓது சமயங்கள் பொருள்உணரும் நூல்கள்
ஒன்ருேடொன் ருெவ்வாமல் உளபலவும்; இவற்றுள்,
யாது சமயம்? பொருள்நூல் யாது இங்கு? என்னில்,
இது ஆகும்; இது அல்லது எனும் பிணக்கதின்றி,
நீதியினல் இவை யாவும் ஒரிடத்தே காண
நின்றது யாதொரு சமயம் அது சமயம்; பொருள்நூல்;
ஆதலினல் இவையெல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கியிடும்; அவைஇரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்"

இதனல், 'எவ்வெச் சமயத்தில் என்ன என்ன நல்லன உளவோ அவை அனைத்தும் சைவ சமயத்தில் உள்ளன' என்பதும், 'அங்ஙனமாகவே அவற்றைக் கூறும் சமயங்கள் சைவ சமயத்திற்கு வேறுபட்டன அல்ல' என்பதும் இனிது விளங்கும். அதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டைக் கூறலாம்.

உலகாயத மதம் 'கடவுள் இல்லை, புண்ணிய பாவங்கள் இல்லை, மறு பிறப்பு இல்லை' என்று கூறினலும், அதன் குறிக்கோள், 'இவ்வுலக வாழ்க்கையை வெறுத்து ஒதுக்குதல் கூடாது; அங்ஙனம் உலகத்தில் வாழும்பொழுது சமூக நீதிக்குக் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்' என்பது. இது சைவ சமயத்திற்குப் புறம்பானது அன்று; சைவ சமயம் இவ்வுலக வாழ்க்கையை வெறுத்தொதுக்கும்படி கூறவில்லை. இறைவனை நீதியே வடிவாக எண்ணுகின்றது சைவ சமயம்.

பௌத்த சமண மதங்களின் குறிக்கோள் ஜீவகாருணியம் - அனைத்துயிர்களின் மேலும் இரக்கம். இது சைவ சமயத்தின் தலையாய ஒழுக்கம் என்பது உலகம் அறிந்தது.

நம் நாட்டில் புதியனவாய் நுழைந்த கிறித்துவம், இசுலாமியம் என்பவற்றின் குறிக்கோள் சமூகத்தொண்டு. இது சைவ சமயத்தில் தானம், தருமம் முதலியவற்றால், 'உலகியல் அறம்' என வற்புறுத்தப்படுகின்றது. மற்றும் இன்னோரன்னவாகப் பலபட எடுத்துக் காட்டலாம். ஆகவே, ஞானசம்பந்தர் முதலிய ஆசாரியப் பெருமக்கள் புறச் சமயிகளைச் சில இடங்களில் இகழ்ந்துரைத்தமை, அவர்கள் தங்கள் சமய நெறி நிற்றலில் கருத்தூன்றாது, சைவ சமயத்தை வெறுத்து நின்றதோடு, அவ் வெறுப்புக் காரணமாகத் தங்கள் சமயத்திற்கே ஒவ்வாத செயல்களைச் செய்யவும் தலைப்பட்டமை பற்றியே என்பது தெளிவாகும். எனவே, "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே - மாதொரு பாகனார்தாம் வருவர்" எனக் கொண்ட சைவ சமயத்திற்கு யாதொரு சமயமும் வேற்றுச் சமயமாய்த் தோன்றுதல் இல்லை என்பது தெளிவு.

இவ்வுண்மை யாவர்க்கும் இனிது புலனாகத் தக்க வகையில் அமைந்து விளங்கின, அண்மையில் தருமையாதீனத்தில் நடைபெற்ற சமய விரிவுரை வகுப்பும், திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும். இவ்வாதீனத்தில் இதுபொழுது 26-ஆவது குருமகாசந்நிதானமாக அருளாட்சி ஏற்று விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், இவ்வாதீனத் தாபகராகிய ஆதி பரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தரது குருபூஜை விழாவை முன்னிட்டு ஆண்டு தோறும் நடைபெறும் சமய வகுப்பு, திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு இவைகள் இவ்வாண்டில் சமய ஒருமைப்பாட்டு வகுப்பாகவும், மாநாடாகவும் நடைபெற வேண்டும் என்று திருவுளம் பற்றிய வண்ணம் நடைபெற்ற வகுப்பிலும், மாநாட்டிலும் கிறித்துவம், இசுலாமியம் உட்படப் பல்வேறு சமய அறிஞர்கள் பங்கேற்றுத் தங்கள் சமய உண்மைகளை வெளிப்படுத்தியதுடன், இத்தகைய சமய ஒருமைப்பாட்டு நிகழ்ச்சிகளைத் தங்கள் உளமாரப் பாராட்டியும் பேசினார்கள். ஆதீனத்தின் ஆதரவில் பன்னிரண்டு நாட்கள் தங்கிச் சமயப் பயிற்சி பெற்ற அறுபதுக்கு மேற்பட்ட அன்பர்களோடு பலரும் சமய ஒருமைப்பாட்டுணர்ச்சியை நன்கு பெறுவாராயினர். இத்தகைய நிகழ்ச்சிகள் பல இடங்களிலும் நடைபெறுமானால் நாட்டில் ஒற்றுமை உணர்ச்சி ஓங்கி உயர்வு பெற வழியாகும். அதற்கு இயன்றவர்கள் எல்லோரும் முன்வருவார்களாக.

உ

குருபாதம்

தருமை ஆதீனஸ்தாபகர் குருபூஜை விழாவை ஒட்டி
24—5—72 மாலையில்

# திருநெறியத் தெய்வத் தமிழ் மாநாட்டைத் தொடங்கிவைத்து

தருமையாதீனம் 26வது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# ஆசியுரை

---

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணிஅன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

வீரசைவ மடத்து அதிபதி அவர்களே! நீதிபதி அவர்களே! சமயப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு அறநெறி கேட்டு அதன்படி நடக்கவந்திருக்கும் இப்போதைய மாணக்கர்களே!

இவ்விழா, இன்றைக்கு 450 ஆண்டுகளுக்குமுன் இத் திருமடத்தை ஸ்தாபித்த ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவை ஒட்டி நிகழ்வதை அறிவீர்கள்! குருபூஜை ஜூன் 2ஆம் நாள் நடைபெறவிருக்கிறது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவ சமாதி எய்திய குருமூர்த்த ஆலயம் ஸ்ரீ ஞானம்பிகை சமேத ஞான புரீசுவரர் திருக்கோயிலாக விளங்குகிறது. அப்பெருமான்

எண்ணிய எண்ணங்கள் கருதிய கருத்துக்கள் நாட்டில் பரவ வேண்டும். அதனுல் மக்கள் மக்களாக உயர்ந்து வாழ வேண்டும். மனிதன் தேவனுவது என்பது பின்னுல். மனிதன் மனிதனுக வாழச் சமயநெறி இன்றியமையாதது. இக்கருத்தை விளக்கவே பெரிய புராணம் எழுந்தது. சைவ – சமயத் தலைவர் களாக விளங்கிய பெருமக்கள், நம் வாழ்க்கை நெறி முறைகளை நாம் நன்கு வகுத்துக்கொள்ள வழிகாட்டியுள்ளனர்.

பல்வேறு சமயங்கள் - கொள்கைகளை அனைவரும் அறிந்து தெளிய இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளால் நமக்கெல்லாம் சமய ஞானம் கைவரவேண்டும். குறிப்பாக இளைஞர்கள் சமய நெறிகளை நன்கு அறிந்துகொள்ள வேண்டும். அவர்களிடையே சமய உண்மைகளை எடுத்துச்சொல்லி, சமய உணர்வை வளர்க்க வேண்டுவது அவசியம். 'ஒருவர் ஒருவற்கு ஆற்றுதிர்' என்பது சங்க இலக்கியம். சமய உணர்வுடையவர்கள் முயன்ருல் நன்மை களையும் விரைவில் பரவச் செய்ய முடியும். அறிவுடைமை குறை வாகவும், அறியாமை மிகுதியாகவும் இருப்பதனுல் நம்மால் நல்லவைகளை விரைவில் பின்பற்ற முடியவில்லை. அறியாமையில் இருந்து உலகைக் கரையேற்றுவது என்பது கடவுளாலும் முடியாது. முடியாது என்ருல் எப்போதும் என்பதில்லை. உயிர் ஓரளவாவது பக்குவம் பெற்ருல்தான் இறையருளும் சித்திக்கும். மாணவன் சிறிய வகுப்புக்களில் முறையாகப் பயின்று வந்தால் தான் M. A., பட்டம் பெறமுடியும். எந்தப் பேராசிரியராலும், முதல் வகுப்புப் படிக்கும் மாணவனை ஒரே நாளில் அல்லது ஓரிரு மாதங்களில் அல்லது ஓரிரு ஆண்டுகளில் M. A., பட்டம் பெறச் செய்ய முடியாது.

சூரியனுல் தாமரை மலர்கிறது: ஆனுல், அரும்பு மலர்வ தில்லை. ஆனுல், அரும்பாவதும், மலர்வதும் சூரிய கிரணத்தால் தான் என்பது உண்மை. எனவே, உயிர்கள் பிறப்பதும் உணர் வதும் அவனருளால்தான் என்பது விளங்குகிறது உயிர்களும் நாளும் முயன்றுவந்தால், அவற்றிற்கு முழுவளர்ச்சியைக் காலப் போக்கில் இறைவன் தருவான்.

மனித பேதங்களுக்கு ஒப்ப, கொள்கைகளும் பலதரப் படுகின்றன. கருத்து வேறுபாடுகள் அவரவர் அறிவின் தரத் திற்குத் தகுந்தாற்போல் அமைவன. எல்லாச் சமயங்களும் - கொள்கைகளும், நாட்டு மக்கள் நலமாக வாழவேண்டும் என்பதற்காகத் தோன்றின என்பதை யாவரும் மறுக்கமுடியாது.

எல்லாச் சமய உண்மைகளையும், நன்மைகளையும் நாம் அறிய பல சமய அன்பர்கள் இங்கே கூடியுள்ளார்கள். அவற்றுள் உயர்ந்த ஒருசில கருத்துக்களையாவது நாம் மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்திலேயே இம்மாநாடு அமைக்கப்பட்டுள்ளது.

அருமையானவற்றையும் ரசிக்கத் தெரியாதவர்கள் சிலர் உண்டு. சிறிய செய்திகளை ரசிப்பவர்களும் உண்டு. இங்கே சிறப்புரையாற்ற வந்திருக்கும் நீதிபதி. மாண்புமிகு மகராஜன் அவர்கள் சிறந்த ரசிகர். ரசிகமணியின் சீடர், கம்பராமாயணத்தில் ஈடுபாடும் புலமையும் கொண்டவர்; சமய பக்தியுடையவர்; அவர் மக்களோடு உறவாடத் தலைப்பட்டுள்ளார். மகராஜனை இரு என்பது உலக வழக்கு. அவர் பேச்சோடு மகாநாடு களை கட்டத் தொடங்கும்.

சமயங்களுள் ஒன்று வீரசைவம், சைவத்தோடு சிறு சிறு பேதங்களைக்கொண்டது. வீரசைவ மடத்தின் அதிபரும் இங்கே வந்திருக்கிறார்கள் வீரசைவம், வீரபத்திரரால் தோற்றுவிக்கப்பட்டது.

சிவபெருமானின் குமாரர்கள் நால்வர், இரண்டுபேர் வியாபகம் உடையவர்கள். இரண்டுபேர் வியாபகம் இல்லாதவர்கள். விநாயகரும், முருகனும் நிக்ரக அனுக்கிரகமூர்த்திகள். வீரபத்திரரும், பைரவரும் சம்ஹாரமூர்த்திகள். வீரசைவர்கள் கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். இங்கே வருகைதந்திருக்கும் வீரசைவமடத்து அதிபதி அவர்கள், பொருளாதாரத்தில் தாழ்ந்திருந்த கும்பகோணம் மடத்தை நடத்தும் பொறுப்பினை ஏற்று 40 ஆண்டுகளாக முயன்று தற்போது அதனை வளர்த்துவருபவர்கள். சொத்து நம்மைத் தேடி வரவேண்டும் என்ற கொள்கை உடையவர்கள்; எளிய, இனிய பண்பாளர்; அவர்கள் வீரசைவம் பற்றி ஒரு எல்லை வகுத்து இன்று காட்டுவார்கள்.

இவ்விழா எல்லா வகையிலும், எல்லோருக்கும் பயன்தர ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளைச் சிந்தித்து, அனைவருக்கும் ஆசி கூறி முடிக்கின்றேம்.

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

[ திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதி கூடிய திருக்கோயிலாகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயில் மகோற்சவம் 24—5—72 முதல் சிறப்பாக நடைபெற்றது. திருவிழா நாட்களில், ஆண்டு தோறும் நிகழ்வதுபோல் இவ்வாண்டும் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டில் சமய ஒருமைப்பாட்டை விளக்கும் முறையில் பல சமயங்களின் கருத்துக்களை எடுத்து விளக்கி அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். அவற்றின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது. ]

24—5—72 புதன்கிழமை முதல்திருநாளன்று, சென்னை உயர்மன்ற நீதிபதி, மாண்புமிகு. திரு. எஸ். மகராஜன் பி ஏ., பி.எல். அவர்கள் ஆற்றிய சிறப்புரையின் சுருக்கம் ;-

இங்கே எழுந்தருளியிருக்கும் குருமகாசந்நிதானம் அவர்கள் இசை ஞானத்தோடு, நல்ல தமிழ் ஞானம் உடையவர்கள். நான் உண்மையை ரசிப்பவன். கொஞ்சம் துணிந்து ரசிப்பவன். கடந்த 40 ஆண்டுகளுக்குள்ளாக சமய உலகத்தில், மடாலய உலகத்தில் பெரும் மாற்றம் உண்டாகியிருப்பதை நான் உணர்கின்றேன். மடங்களால் தமிழும், சமயமும் மறுமலர்ச்சி பெற்றன. நாமெல்லாம், இவ்வாறான மடங்களுக்குச் சீடர்களாகி, தீட்சை பெற்று அருட்செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். மிகச் சிறந்தவர்கள் இந்த ஆசனத்தில் இருக்கிறார்கள். அதனால் தான் 10 நாள் விழாவில் முதல் நாளும், கடைசி நாளும் நான் கலந்து கொள்ளுகின்றேன்.

குருபக்தி மிக மிக அவசியம் என்பதைச் சைவரும், வைணவரும் ஒப்புக்கொள்ளுகின்றார்கள். குருபக்தியின் சிறப்பைத் திருமூலர்,

" காட்டுங் குறியுங் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டிடின் அல்லது
ஆட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே "

என்று விளக்குவார்.

எப்போதுமே கடவுளோடு ஒன்றியிருப்பவர்களிடையே நெருக்கம் இருக்கிறது. இங்கே பல சமயக் கருத்துக்களும் ஆராய இடமளிக்கப்பட்டிருப்பதற்கு என் நன்றி. ஒத்த அற வுணர்வுடையவர்கள் யாவரும் இறைவன் அருளைப் பெறுவார்கள் என்பதை,

" இத்தவம் அத்தவம் என்றிரு பேரிடும்
பித்தரைக் காணின் நகுமெங்கள் பேர் நந்தி
எத்தவ மாகிலென் எங்குப் பிறக்கிலென்
ஒத்துணர் வார்க்கொல்லை யூர்புக லாமே "

என்று திருமூலர் விளக்கிக் காட்டுவார். பிறசமய நற்கருத்துக் களை நாம் ஸ்வீகரித்துக்கொள்ளத் தயாராக வேண்டும். சமரச நிலையில் இருந்து இறையருளை அடைய முயலவேண்டும் என்ப வன் நான். மார்க்கங்கள் பல, தத்துவம் ஒன்றே, ஏதேனும் ஒரு நாமத்தைப்பற்றி நின்றே உய்திபெற முடியும். திருமூலர், 'பேராயிரம் உடைப்பெம்மான்...........பேர் ஒன்றினில் ஆரா அருட்கடல் ஆடுகின்றாரே' என இதனை விளக்கியருள்வார்.

ஒரு மேல்நாட்டு அறிஞன்முன் இறைவன் தோன்றி, சத்தியம், சத்திய வேட்கை இந்த இரண்டில் ஒன்று கேள் என்ற போது, சத்திய வேட்கையையே எனக்குத்தா! சத்தியம் - பூரண மானது. அதனை நீயே வைத்துக்கொள் என்றானும்! நமக்கும் சத்திய வேட்கை வேண்டும். அனுபவஞானிகண்ட உண்மையை அறிவினால் காணமுயலும்போது அது சிதைந்து போகிறது. அறிவினால் பேருண்மைகளை அறியமுடியாது; உணர்வினால்தான் அறியமுடியும்.

பட்டினத்தார் - ஒரு தமிழர் 1000 ஆண்டுகளுக்குமுன் இறை வன் எங்கிருக்கிறான் என்பதனை நுணுக்கமாக விளக்கியுள்ளார்.

" ஊன்தேடும் உயிரேயோ
உயிர்தேடும் உணர்வேயோ
வான்தேடும் மறையேயோ
மறைதேடும் பொருளேயோ "

என்ற இப் பாட்டு இறைமைத்தத்துவத்தை விளக்குகிறது.

கும்பகோணம் பெரிய மடம் மகாசந்நிதானம் ஸ்ரீமத் சாந்ததேவ சாரங்க தேசிகேந்திர சுவாமிகள் அவர்கள் "வீரசைவம்" பற்றி ஆற்றிய உரையின் சுருக்கம் :-

பாரதநாட்டில் 70 லட்சம் வீரசைவர்கள் இருக்கிறார்கள். தென்னாட்டில் இவர்கள் கணக்குக் கிடைக்கவில்லை. சைவத்தில் ஒரு கூறு வீரசைவம். ஆசாரம் முதலியவற்றில் கொஞ்சம் வேறு பாடு உண்டு. கோயில் வழிபாடு, சிவபூஜை முதலியன எல்லாம் ஒன்றேதான். வசவேசர் புராணம் முதலிய நூல் வீரசைவத்தைப் பற்றிக்கூறும். எந்த தர்மத்தையும் துவேஷம் செய்வது என்பது வீர சைவத்தில் இல்லை.

எக்குலமானாலும், எந்த ஜாதியானாலும், எவன் சிவபக்தி செய்கிறானோ அவன் வீரசைவனாவான். 63 நாயன்மார்களையும் பாராட்டிச் சிறப்பிப்பது கன்னட நாட்டில் பழக்கம். இது வீர சைவர்கள் நாயன்மார்களை எப்படி மதிக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

சைவத்திற்கும் – வீரசைவத்திற்கும் இடையே சகோதர பாவம் உண்டு. மாணிக்கவாசகர் பாடல்களில் வீரசைவத்தைப் பற்றிய விஷயங்கள் வருகின்றன. இரண்டு நெறியிலும் சிவலிங்க பூஜைசிறப்பு. வீரசைவத்தில் இஷ்டலிங்க பூஜை முக்கியமானது.

எள்ளில் எண்ணெய் போலவும் கல்லில் ஆபரணம் போலவும், மண்ணில் பொருள்கள் போலவும் கடவுள் சரீரத்தில் மறைவாக இருக்கிறார்.

தூல, சூட்சும, காரணசரீரங்கள் என உடம்பு மூன்றுவகை என்பதும், மும்மலம் உண்டு என்பதும், மும்மலத்தைச் சுட்டு இடுவதே முப்புண்டர விபூதி என்பதும் வீரசைவக் கோட்பாடுகள்.

இஷ்டலிங்கம், பிராணலிங்கம், மூலலிங்கம் என, இலிங்கம், மூவகைப்படும். முறையான 21 தீட்சைகளுக்குப் பின்னரே ஒருவன் வீர சைவனாகிறான். வீர சைவக் கோட்பாடுகள் முழுவதையும் தெரிந்துகொள்ள 12 ஆண்டுகள் வேண்டும்.

மக்கள் ஆட்சியில் சகோதரபாவம் நிலவும் இக்காலத்தில் - நாத்திகம் பெருகிவரும்போது ஆஸ்திகர்கள் ஒன்றுபட வேண்டும். 'சர்வதர்ம சம்மேளன' என்று இந்த மகாநாட்டைக் கூறலாம். இம்மகாசந்நிதானத்தின் நோக்கம் எவ்வளவு உயர்ந்தது என்பதை இம்மாநாடு காட்டுகிறது.

வேதம், ஆகமம், புராணம் யாவும் வீரசைவத்திற்கு உடன்பாடு உடையன.

வீரசைவர்கள் 'அட்டாவரணங்கள்' எனப்படும் எட்டனை யும் பெரிதும் போற்றவேண்டும். அவை, குரு, லிங்கம், சங்கமம் பஸ்மா, (திருநீறு) உருத்திராக்கம், பாதோதகம் (தீர்த்தம்) பிரசாதம், மந்திரம் (ஐந்தெழுத்து) என்பன.

வீரசைவத்தில் ஆறு ஸ்தலங்கள் (படிநிலைகள்) உண்டு. அவை, பக்தஸ்தலம், மகேசஸ்தலம், பிரசாதிஸ்தலம், பிராண லிங்க ஸ்தலம், சரண ஸ்தலம், ஐக்கிய ஸ்தலம் என்பன.

(இவற்றை விளக்கியபின்னர் வீரசிங்கமடம் கும்பகோணத் தில் தோன்றிய வரலாற்றைக் கூறி, வீரசைவக் கோட்பாடுகளை விளக்கும் கட்டுரை ஒன்றையும் படிக்கச் செய்தார்கள்.)

சென்னை, திருக்கோயில் ஆசிரியர், சித்தாந்தப் புலவர் மணி, புலவர். திரு. ந. ரா. முருகவேள் எம்.ஏ., எம்.ஓ,எல்., அவர்கள் "சங்க நூல்களில் சமயம்" என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் சுருக்கம் :.

பக்தி இயக்கம் கி. பி. 7ஆம்நூற்றுண்டில் தோன்றியது. திரு வள்ளுவரும், தொல்காப்பியரும் போன்ற சான்றோர்களே சமயா சாரியர் சந்தானுசாரியர்களுக்கு வழிகாட்டியாக விளங்கியவர்கள். 'தமிழ்' என்ருலே கடவுளை உணர்த்துகின்ற மொழி என்பது பொருள். 'தமி' என்ற சொல்லுக்கு, கடவுள் என்பது பொரு ளாக மெய்கண்டாரால் விளக்கப்படுகிறது. உயிர், மெய் என்ற குறியீடே சிறப்பானது. உடம்பை மெய் என்பது உண்மைப் பொருளாகிய கடவுள் இடம் பெற்றிருப்பதனுல் ஸ்தானியாகு பெயராக இடப்பெற்றது என்பர் பாம்பன் சுவாமிகள்.

'அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கம்' என்ற தொல்காப்பியத் தொடரில் ஆறுவகைப்பட்ட அகச்சமயங்களை உணர்ந்த அந் தணர் குறிக்கப் பெற்றிருக்கிருர்கள் என்பர் மறைமலை அடிகள்.

'வேண்டிய கல்வி யாண்டு மூன்றிகவாது' என்ற தொல் காப்பிய நூற்பாவில் ஆண்டு என்பது அவ்விடத்து (கற்கும் காலத்து) என்றும் மூன்று - பதி, பசு, பாசம் என்ற மூன்று என்றும் உரை கூறுவர் சுவாமிநாத தேசிகர்;

'நாலிருவழக்கில் தாபதப்பக்கம்' என்பதில் நாலிருபக்கம் என்பது 'அஷ்டாங்க யோகம்' என்ற வீரசைவ நெறியாக இருக்கலாம்.

'காமஞ்சான்ற கடைக்கோட்காலை' என்ற தொல்காப்பிய நூற்பாவில் 'சிறந்தது' என்பது சிவனையே குறித்தது. இதனையே 'செம்பொருள்' என வள்ளுவரும் குறித்தார். எனவே பிற்காலச் சமயக்கொள்கைகளின் கருவான கருத்துக்கள் சங்க நூல்களில் அமைந்திருக்கின்றன என்பது புலனாகும்.

(சொற்பொழிவுநிகழ்ச்சிகளுக்குப்பின்னர், தஞ்சைச்சகோதரி களால் "திருநீலகண்டர்" வரலாறு இன்னிசைக்கதையாக நிகழ்த்தப்பட்டது.)

25—5—72 வியாழக்கிழமை இரண்டாம் திருநாள் அன்று ஸ்ரீ சாந்தலிங்க அடிகளார் திருமடம் வித்துவான், ஸ்ரீமத். இராமசாமி அடிகளார் அவர்கள் ஆற்றிய சிறப்புரை யின் சுருக்கம் ;-

சர்வ-சமய ஆய்வு என்பது தமிழ் நாட்டிற்குத் தொன்மை யானது. மணிமேகலையும், சிவஞானசித்தியார் பரபக்கமும் இதனை வலியுறுத்துவன. 'கொலை மறுத்தல்' என்னும் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் எழுதிய சமய நூலில் பிற சமய நூலாசிரியர்களாகிய சமயவாதிகளை விண்மீன்களாகவும், சைவ சித்தாந்த சைவசமய ஆசாரியரை முழுமதியாகவும் கூறப்பட்டிருக் கிறது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கல்வியும், சமயப் பண்பும் வளரவேண்டுமென்ற பெருநோக்கோடு இதனை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

திருநெறியதெய்வத் தமிழை மேற்கொண்டுவாழும் வாழ்க்கை நமக்குக் கைவரவேண்டும். ஒருநெறிய மனம் வைத்து இறை யருளைச் சிந்திக்கவேண்டும். 'தொண்டனேன் பட்டதென்னே' என்பது வழிபாட்டில் விளைந்த பெருமிதமாக அமைகிறது. வழிபாட்டுநெறியின் மூலம் நம் உள்ளம் தூய்மை பெறவேண்டும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர், டாக்டர். திரு. சோ. ந. கந்தசாமி எம். ஏ. எம். லிட்., பிஎச்டி. அவர்கள் "பௌத்தம்" என்பதுபற்றி உரையாற்றியதன் சுருக்கம் :-

பௌத்தர்கள் ஆன்மாவை உடன்படாதவர்கள். ஐந்து ஸ்கந்தங்களால் கட்டப்படுவது உடம்பு என்பது அவர் தம் கொள்கை. வினை உண்டு; ஆனால், அதற்கு ஒரு முதல் இல்லை; அது தானே ஆயது எனக்கூறி வினைக் கொள்கையை உடன் படாதவர்கள் பௌத்தர்கள்.

தியான பௌத்தம் உலகெங்கும் பரவியுள்ளது. உலகில் 40 கோடி பௌத்தர்கள் இருக்கிருர்கள். 20 லட்சம் பௌத்தக் கோயில்களும், 8 லட்சம் பௌத்த பிட்சுக்களும் உள்ளனர். பௌத்தம் தமிழகத்தைப் பொருத்தவரை சிறந்த கருத்துக் களும். கலைகளும், இலக்கிய இலக்கணங்களும் வளரப் பெருந் துணையாக இருந்தமையை மறக்கவியலாது.

சென்னை, கலைமகள் ஆசிரியர், வாகீச கலாநிதி, செந் தமிழ்ச் செல்வர், திரு. கி. வா. ஜகந்நாதன் எம்.ஏ,, அவர்கள் "புராணங்களும் இக்காலக் கதைகளும்" என்ற தலைப்பில் உரையாற்றியதன் சுருக்கம் :-

புரா + நவம் என்ற சொற்களில் இருந்து புராணம் என்ற சொல் உருவாயிற்று. மனிதன் எவ்வாறு {வாழவேண்டுமென்று வழிகாட்டுவன புராணங்கள். பெரியபுராணம் மட்டும், உண்மை வரலாறு கூறுவது, எஞ்சியனவெல்லாம் ஏதோ ஒரு மூலக் கருத்தைச் சுவை கூட்டிக் கூறவே எழுந்தன. பண்புகளைக் கதாபாத்திரங்களாக்கி எளிமையாக்கிக் கூறுவது புராணத்தின் குறிக்கோள். புராணங்கள் பதினெட்டு என வழங்கப்படும். புராணங்கள் எளிய, இனிய கதைகளைக் கூறுவதன் மூலம் கருத்து விளக்கம் செய்வது எல்லாச் சமயத்திலும் உண்டு. அவ்வகையில் ஆண்டவனை – அடியார்களை நடுவாக வைத்துப் புராணங்கள் தோன்றின. தமிழ் நாட்டிற்கே ஒருசிறப்பு உண்டு. இங்கேதான் தல புராணங்கள் தோன்றின என்பது அது. காரணம் தலங்கள் நிறைந்த நாடு நம்நாடு என்பதே,

புராணங்கள் இறைமை எண்ணங்களை நினைவூட்ட எழுந் தன. கிளைக்கதைகளோடு, அரிய நயங்கள் பலவும் சில உதாரணங்களும் புராணங்களுள் காணப்படுகின்றன, எனக் கூறி சில உதாரணங்களையும் நயங்களையும் காட்டி விளக்கினர்.

(சொற்பொழிவு நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் மாயூரம் ஸ்ரீ கண நாதர் பொம்மை நாடக சபையினரின் பொம்மலாட்டம் நிகழ்ந் தது. வள்ளித்திருமணம் பொம்மலாட்டத்தில் இடம்பெற்றது.)

26—5—72 வெள்ளிக்கிழமை மூன்றும் திருநாளன்று நீடூர் M. M. H. அராபிக் கல்லூரிப் பேராசிரியர், மௌல்வி திரு. ஏ. அப்துல் ஜபார் அவர்கள் "இஸ்லாம்" என்ற மதம் பற்றிப் பேசியதன் சுருக்கம் :-

இஸ்லாம் என்ற சொல்லுக்குச் சாந்திமார்க்கம் அல்லது சமாதான மார்க்கம் எனப் பொருள் கூறப்படும். இஸ்லாம் எல்லாச் சமயங்களுக்கும் முன் தோன்றியது என்பது நம் கோட்பாடு. மனித இனம் முறை தவறிய போதெல்லாம் அவர்களை நல்வழிப்படுத்த குருமார்களாகிய நபிகள் தோன்றினர். இங்ஙனம் ஒரு லட்சத்து 24 ஆயிரம் தீர்க்கதரிசிகள் தோன்றிய பின் கடைசியாக நபிகள் நாயகம் அவதரித்தார். அவரே இறைவனின் இறுதித் தூதர். எனக்குப்பின் நபிகளோ, வேதமோ இல்லை என்றார். யாவர்க்கும் பொருந்தும்படியாக எல்லாம் வல்ல அல்லாஹ் கடைசி வேதமாகிய குர்ஆனைப் படைத்தார்.

நபிகள் இரண்டு கொள்கைகளை விளக்கினார்கள். ஒன்று : உலக மக்கள் அனைவரையும் என்னுடையவர்களாகக் கருதுகின்றேன் என்பது. இரண்டு, உலகில் என் கொள்கைகளை ஏற்றவர்கள் ஒரு பிரிவினர்; ஏற்க வேண்டுபவர்கள் ஒருபிரிவினர் என்பது. தீயவற்றைத் தடுப்பதும், நல்லனவற்றை ஏவுவதுமே, 'குர்ரான்' வேதத்தின் உயிர் நாடிக் கொள்கை.

இறைவன் 'அல்லாஹ்' என அராபி மொழியில் அழைக்கப்படுவான். அதுவே அவனது இயற்பெயர். எஞ்சிய 99 பெயர்கள் இறைவனுக்கு இடுகுறிப் பெயர்களாகும். இறைவன் அருளிய வேதம் "நபிகள் வருகையை அருட்கொடை என்று கருதுக, அவரை ஏற்கவில்லை என்றால் பேரிழப்பு உண்டாகும்" என எச்சரிக்கிறது. இவ்வுலகம், மறு உலகம் என்ற கோட்பாடு இஸ்லாமுக்கு உடன்பாடு. அரசியலும் மதமும் வேறல்ல என்பதுவும், மறுஉலகில் ஒவ்வொருவரும் இறைவனைச் சந்திக்க வேண்டும் என்பதும், அதற்குப்பக்குவம் பெறவே இவ்வுலக வாழ்வு தரப்பட்டது' என்பதும், இஸ்லாம் கோட்பாடுகள்.

இஸ்லாமின் மூலமந்திரத்தை ஏற்பவரே இஸ்லாம் ஆகலாம். இவ்வுலகில் வணங்குதற்கு அல்லாவைத் தவிர வேறு இறைவன் இல்லை

ஐந்து கோட்பாடுகள் இஸ்லாமில் இன்றியமையாதன.

1. கடவுளே (அல்லாஹ்) பரம்பொருள்; அவரையன்றி ஒருவரையும் வணங்கக்கூடாது.

2. ஒரு நாளில் ஐந்துமுறை வழிபாடு நிகழ்த்தவேண்டும்.

3. ஆண்டில் முப்பது நாட்கள் நோன்பிருக்கவேண்டும்,

4. 100க்கு 2½ ரூபாய் அளவில் அரசிற்கு வரி (சகாத்) கட்ட வேண்டும்.

5. வாழ்வில் ஒருமுறையாவது ஹச் செய்யவேண்டும். திரு. மக்கா சென்று (காபா) திருக்கோயிலை வணங்கவேண்டும்.

என்னை வணங்கவே நான் மனிதனைப் படைத்தேன். உயர் நிலை பெற உடல் தேவை. அதற்கு உலகியல் வாழ்வு வேண்டப் படும் என்பன குர்ரான் வாசகங்கள். வாழ்விற்காக வியாபாரம், விவசாய நெறிகளை மேற்கொள்ளலாம்

இஸ்லாம் மதம் வாளால் பரப்பப்பட்டது என்பது உண்மை யன்று. எங்கள் மார்க்கத்தில் நிர்ப்பந்தம் ஏதுமில்லை,

வட்டி வாங்கக் கூடாது என்பது இஸ்லாம் விதிக்கும் முக்கிய மான கட்டுப்பாடு. சகாத் என்ற வரி சரியாக வசூலிக்கப் பட்டால் அரசு நடத்த வேறு வரிகளே தேவையில்லை. உழைப்பு கண்டிப்பாக இங்கே வற்புறுத்தப்படுகிறது.

பெண்ணுக்குச் சம உரிமையும், விருப்பம்போல் மணம் செய்து கொள்ளும் உரிமையும் இஸ்லாம் வழங்குகிறது. இளமை மணத்தைப் பருவ காலத்தில் உடைத்தெறிய பெண் களுக்கு வகைசெய்யப்பட்டுள்ளது. சொத்தில் பங்குண்டு. திருமணக் காலத்தில் ஆண்மகன் பொருள் கொடுத்து மணம் புரிந்து கொள்ள வேண்டும். அதனை விருப்பம்போல் செலவு செய்யப்பெண்ணுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

சென்னை, தொல்பொருள் ஆராய்ச்சித்துறை, திரு இரா. நாகசாமி எம். ஏ., அவர்கள் "கல்வெட்டுக்களில் சமயம்" என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரைச் சுருக்கம் :-

மிகப்பழமையான சமயச் சார்புடைய கல்வெட்டுக்கள் சமணச் சார்புடையனவாகவே உள்ளன. அவ்வகையில் கருவூரை அடுத்த வேலாயுதம்பாளையம் கல்வெட்டும், மதுரையைஅடுத்த அரிக்காபட்டிக் கல்வெட்டும் மிகத் தொன்மை வாய்ந்தன.

கி. பி. 6ஆம் நூற்றுண்டுக்குப் பின்னரே தமிழகத்தில் கல்வெட்டுக்கள் அதிகம் தோன்றின.

மகேந்திரவர்மன் காலத்துத் திருச்சி மலைக்கோட்டைக் கல்வெட்டு அப்பர் பெருமான் சமணம் விட்டுச் சைவம் சார்ந்த

செய்தியை அழகுற விளக்குகிறது, மகேந்திரன் மண்டபப் பட்டில் முப்பெருந் தெய்வங்களாகிய பிரமன், சிவன், திருமால் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் கோயில் எடுப்பித்தான் என அறியப் படுகிறது.

இராசசிம்மன் காலத்திய கல்வெட்டு பூசலார் பொருட்டு அவன் அசரீரி கேட்ட வரலாற்றை விளக்குகிறது. இவன் காலத்தேதான் சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் கல்லில் பொறிக்கப்பட்டன.

இராசசிம்மன் சைவ-சித்தாந்த முறைகளை முற்றக்கண்ட வன். எல்லாவித மலங்களும் போக்கடிக்கப்பெற்றவன். சிவ சூடாமணி என்ற பெயர் பெற்றவன்; தேவ பக்தன்; என்றெல்லாம் அக்கல்வெட்டுக் குறிக்கிறது. தோன்றல், நிறுத் தல், அழித்தல் மூன்றிற்கும் சிவனே கர்த்தா என்கிறது காஞ்சிக் கல்வெட்டு.

பரமேஸ்வரவர்மன் காலத்து, காசாக்குடி வடமொழிப் பட்டயம் பல்வேறு தெய்வங்களுக்கும் வணக்கம்கூறித் தொடங்கு கிறது.

பாண்டியன் பராந்தகன் நெடுஞ்சடையன் செப்பேடு, அவன் அரசியல் அலுவலன் மாறன்காரி என்பான் ஆனைமலை நரசிங்கப்பெருமாளுக்கு நிபந்தம் அளித்தமையைக் கூறுகிறது,

உத்திரமேரூர்க் கல்வெட்டுக்கள் எவ்வெத் திசையில் எவ்வெவ் இறையவர்களுக்குக் கோயில் எடுக்கவேண்டுமென் பதை விளக்குகிறது. அதே அமைப்பில் இன்றும் அங்கே கோயில்கள் உள்ளன.

'கோயில்கொண்டு குடி நிறீஇ – என்ற சோழர்காலக் கல் வெட்டு கோயில் கட்டியபின் குடிமக்களுக்கு இடம் ஒதுக்க வேண்டிய முறைகளைக் கூறுகிறது. கங்கைகொண்ட சோழ புரம், கூழம்பந்தல் இங்கெல்லாம் இம்முறைமேற் கொள்ளப் பெற்றிருக்கிறது.

சாணக்கிய விக்கிரமாதித்தன் காஞ்சிக்குப்படை எடுத்து வந்தவன், கயிலாயநாதர் கோயிலைக்கண்டு வணங்கி அதற்கு ஊறுவிளைவிக்கலாகாது என உத்தரவிட்டான் என்பது அவனது செப்பேடுகளாலும் காஞ்சியில் உள்ள கன்னடமொழிக் கல் வெட்டுக்களாலும் நன்கு விளங்குகின்றது.

மன்னர் தம் அளவற்ற பக்திப்பெருக்கில்தான் ஏராளமான ஆலயங்கள் பிறந்தன. தஞ்சைப் பெருங்கோயில் அதற்குச் சான்று பகர்கிறது. நல்லறப் பணிகளில் தம் அரசியல் தலைவர்

களையும் ஈடுபடுத்தினன் இராசராசன். போரிடும் வீரர்கள் ஊனமடையாதிருக்கத் தஞ்சைப் பெரிய கோயிலில் நுந்தா விளக்கிட்ட செய்தி காணப்படுகிறது. அதற்கு மூலதனமாக 98 ஆடு அல்லது 48 பசு அல்லது 32 எருமை கொடுக்கவேண்டு மென்ற செய்தி அறியப்படுகிறது.

(சொற்பொழிவு நிகழ்ச்சிகளுக்குப் பின்னர், தேவார இசை மணி சீகாழி. திரு |S. திருஞானசம்பந்தம், தேவார இசைமணி திருச்சி திரு. S. முத்துக்கந்தசாமி இவர்களது திருமுறை இசை யரங்கு நிகழ்ந்தது ) (தொடரும்)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK


### Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkali.

சீர்காழி திருப்பதியைத் தரிசிக்கும் பேறு இன்றைய நாளில் பெற்றேன். தஞ்சை மாவட்டத்தில் 1950 - 1952 ஆண்டுகளில் தஞ்சை மாவட்டக் கலெக்டரின் நேர்முக அலுவலராகப் பணி யாற்றிய காலத்தும் இக்கோயிலைத் தரிசித்தேன் பின்னர் இது வரையும் இங்குவராதது என் தவக்குறையெனக் கருதுகிறேன். எனினும் என் குடும்பத்தினருடன் இன்றையதினம் கோயிலில் வழிபாடு செய்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சியும் மன அமைதியும் பெற்றேன். கோயில் தூய்மையில் சிறப்பாகவும் அழகில் வனப் பாகவும் இருந்துவருவது எல்லோரையும் ஆனந்தத்தில் ஆழ்த் தியது. இக்கோயிலின் கண்காணிப்பாளர் திரு, சௌரிராசன் தஞ்சையில் நான் பணியாற்றிய காலத்தில் துணை தாசில்தாராகத் திறமையாகப் பணியாற்றியவர். தற்போது கோயில் நிர்வாகத் திலும் அடியார்களுக்குக் கோயில் தரிசனம் செய்துவைப்பதிலும் மிகவும் கருத்துக்கொள்கிருர். கோயில் இறைபணியாளர்களும் அக்கறையுடன் பணியாற்றிவருவது போற்றத்தக்கது. தொன்று தொட்டு சீரிய முறையில் தன் கோயில்களை மிகத் திறமையாக நிர்வாகம் செய்துவரும் தருமை ஆதீனத்தார் இக்கோயிலுக்கு இக்காலத்தில் இவ்வளவுசிறப்பு அளிப்பதற்காகப் பக்தகோடிகள் இவ்வாதீனத்திற்குக் கடமைப்பட்டுள்ளார்கள். தாழ்மையான என் வணக்கங்களைச் செலுத்திக்கொள்கிறேன்.

கோ. முத்துசாமி I. A, S.
கலெக்டர் முன்னுள் மாவட்டம். 5 C. வாயிலார் நாயனர்நகர்
மயிலாப்பூர், சென்னை - 4.

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவில்



தருமையாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
சிவநேசச் செல்வர்கள் புடைசூழ
குருமூர்த்த தரிசனத்திற்கு எழுந்தருளல்.

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவில் :




26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் கஜபூஜை செய்தருளல்.

கோவிலூர் மடாதிபதி
ஸ்ரீலஸ்ரீ இராமநாத ஞானதேசிக சுவாமிகள்
தருமையாதீனத்திற்கு வருகை புரிந்தபோது




தருமையாதீனப் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தல்.


தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவில்:




பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பட்டணப்பிரவேசமாக எழுந்தருளல்.



தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சிவனேசச் செல்வர்கள் புடைசூழ பட்டணப் பிரவேசத்திற்கு எழுந்தருளல்.



தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சிவனேசச் செல்வர்கள் புடைசூழ பட்டணப்பிரவேசமாக எழுந்தருளல்.



தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பட்டணப்பிரவேசத்திற்கு எழுந்தருளியபோது உயர்மன்ற நீதிபதி மாண்புமிகு. திரு. S மகராஜன் அவர்களும், சிதம்பரம் டாக்டர் திரு. K. அரங்கசாமிப் பிள்ளை அவர்களும்.

தருமையாதீனம் குருபூசைவிழாவையொட்டி நடைபெற்ற

# கோடைக்காலச்
# சமய விரிவுரைப் பயிற்சி வகுப்பு

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் குருபூஜை விழாவையொட்டி, சமய உண்மைகளை முறையாக விரித்துக் கூறிப் பயிற்சியளிக்கும் சமய விரிவுரை வகுப்பு 22—5—72 முதல் 2—6—72 காலைவரை நடைபெற்றது. தமிழகத்தின் பலபகுதிகளிலிருந்தும், பட்டதாரி ஆசிரியர்கள் பட்டப்படிப்பு, புலவர் படிப்புத் துறைகளிலுள்ள மாணவர்கள் கோயில் அறங்காவலர்கள் முதலிய 57 பயிற்சியாளர்கள் வகுப்பில் கலந்துகொண்டனர்.

22—5—72 திங்கள் காலை 10 மணிக்குத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசி வழங்கியருளி னார்கள்.

நாடோறும் காலை 10 மணிமுதல் 12 மணி வரையும் மாலை 4 மணிமுதல் 5 மணி வரையும் வகுப்புக்கள் நடைபெற்றன. பயிற்சியாளர்கள் மாலை 6 மணிமுதல் நடைபெற்ற திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டில் கலந்துகொண்டு சொற்பொழிவுகளைக் கேட்டு குறிப்புக்கள் எடுத்துக்கொண்டு பயனுற்றனர்.

22, 23—5—72 ஆகிய இருநாட்களிலும் திருக்கடவூர், வேளூர், சீகாழி ஆகிய திருக்கோயில்களுக்கு அழைத்துச் செல்லப் பெற்றனர். சிவபுராண பாராயணத்துடன் ஆலய வழிபாடுகள் செய்வித்துத் தலவரலாற்றுச் சிறப்புக்கூட்டங்கள் நிகழ்த்தப் பெற்றன.

நாடோறும் காலையில் நீராடி பயிற்சியாளர்கள் அனைவரும் சிவபுராண பாராயணத்துடன் தருமையாதீனத்திலுள்ள கோயி லுக்குச்சென்று வழிபட்டனர். வேதம், ஆகமம், உபநிடதங்கள், பத்ததிகள், புராணங்கள் சைவசித்தாந்தம் திருமுறைகள் ஷண் மதங்கள், நீதி நூல்கள், சமய இலக்கியங்கள், பண்டார சாத் திரங்கள் முதலிய பல தலைப்புக்களில் அறிஞர்கள் பலர் விரி வுரையாற்றினர். நாடோறும் குறிப்பெடுத்துக்கொண்டு பயிற்சி யாளர்கள் பயனுற்றார்கள். ஆதீனச் சார்பில் பயிற்சியாளர்கட்கு இலவச உண்டி, உறையுள் வழங்கப்பெற்றன.

சமயப்பயிற்சி வகுப்பின் நிகழ்ச்சிகளை அவ்வப்போது குறிப்புக்கள் எடுத்துக் கொடுத்துத்தர நான்கு அணிகள் அமைக்கப்பெற்றன. இதில் கலந்துகொண்டவர்கள் அனைவரும் செம்மையாகத் தங்கள் பணிகளைச் செய்து உதவினர்.

சமயப் பயிற்சி வகுப்பின் விரிவுரைக் குறிப்புக்கள் முறையாகப் பின்னர் வெளியிடப்பெறும்.

1—6—72 அன்று மாலை பயிற்சியாளர்களுக்குத் தேர்வு வைக்கப்பெற்றது. 3—6—72 அன்று சமயப்பயிற்சி வகுப்பின் நிறைவுவிழா நிகழ்ந்தது.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு. S. மகாராஜன் அவர்கள் தலைமையேற்றார்கள். பயிற்சியாளர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் அருளாசியுடன் திருநீற்றுப்பை, குருவழிபாடு என்ற நூல் ஆகியனவும் சான்றிதழ்களும் வழங்கப்பெற்றன.

பயிற்சியாளர்கள் சார்பில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானயவர்கள் திருவடிகளுக்கு நன்றியுரைப்பாமலரைப் புலவர் திரு. மா. கண்ணப்பன் படித்தளித்தார்.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adheenam

Sri Sattanathaswamy Devasthanam, Sirkali.

என் வாழ்நாளில் முதல் தடவையாக பிரம்மபுரீசர்கோயில் தரிசனம் கிடைத்தது. கோவிலும் அங்குள்ள கட்டுப்பாடு முறைகளும் தெய்விகமயமாக இருப்பது கண்டு மிக்க மகிழ்ச்சி. எல்லோருக்கும் இவ்வருள் கிட்டுவதாக.

நடராஜன்,

20—5—72. நிர்வாகப் பொறியாளர், சென்னை.

# பெருந்துறவி

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்,

திரு. ச. தண்டபாணி தேசிகர்

**சீலத்தின் கோலம் :**

சீலம் எளிமை-இனிமை-நெறிபிறழாத நிலை இத்தனையுந் சேர்ந்த ஒன்று எனப் பழைய உரை நூல்கள், இலக்கணங் கூறின.

எளிமை, பெருமைக்கு உரிய எல்லாம் இருந்தும் அதனைக் கையாளாமல்-காட்டிக் கொள்ளாமல் மக்கள் அனைவரிடத்தும் பழகும் பெருந்தன்மை-பூண்பன-புனைவன ஊர்வன-உண்பன வற்றில் எல்லாம் ஆடம்பரமில்லாத அருமை. இத்தனை செறிவான பண்புகள் அனைத்தும் ஒருங்கிணைந்த காவியத்தலைவன் ஒருவனைக் கம்பர் காட்டலாம், காளிதாசன் காட்டலாம், நாம் நேரிற்காண இயலாது. அனைத்தும் கற்பனை யுலகத்துக் காட்சிகளே, காட்சியுலகில் நாம் கண்ணுற் கண்டது ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி சுவாமிகளிடந்தான் என்பதை முப்பதாண்டாக வாழ்கின்ற தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள்.

மாதவச் சிவஞான சுவாமிகள் அப்பர் சுவாமிகள் துதியில் 'சிந்தைதனில் இடையறுப் பெருந்துறவும், நாயகன் சேவடி தைவரு சிந்தையும்' ஆகிய சில சொற்றொடர்களைக் கொண்டு அப்பர் திருவுருவத்தைத் தீட்டினார்கள். நாங்கள் வாழ்கின்ற இந்தநாளில் இத்தனையுஞ் செறிந்த சிவஞானியைத் தரிசிக்கும் பேற்றினைப் பெற்றிருந்தோம் என்பதில் தனிப்பெருமை யடைந்தோம்.

மனம் ஒரு குரங்கு; என்றும் பற்றியதைப் பற்றி நில்லாது ஒன்றை விட்டு ஒன்றைப் பற்றும். உயிர் பல வினைகளைச் செய்ய உதவியாக இருக்கும், அதனால் நல்லன - கெட்டன என்று பிரித்தறிய வாய்ப்பின்றி விரும்பியதை விரும்பியபடி நிறைவேற்றிக் கொள்ளும். அதனால் துன்ப இன்பங்களைத் தேடிக்கொள்ளும். காற்றாடியும் - உருளையையும் போல மாறி மாறிப் பிறந்து ஓயாமல் வருந்த வழி செய்யும். இத்தகைய மனத்தை அடக்க முடியாது. அடக்குவதும் பயனுள்ள செயலாகாது.

பெருக்கெடுத்து ஓடி வருகின்ற வெள்ளத்தை மணலிட்டு அதன் போக்கைத் தடுத்தால், எங்காவது பிய்த்துக்கொண்டு பெருங்கேடுதானே விளைவிக்கும். அதுபோலத் தான் ஓடுகின்ற மனத்தை ஓட்டற்று நிற்கச் செய்வது. ஆதலால் அம்மனத்திற்கு ஒரு போக்குக் காட்டுவதே நல்லது. நல்லதொன்றைப்பற்றி நினைக்கச் செய்வதே நல்லது என்பதையுணர்ந்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள்.

ஆதலால், காணுமிடங்களில் எங்கும் 'சிவ சிவ'. காதில் விழக்கூடிய ஒலிகளனைத்தும் சிவ ஒலி. பண்ணாருந் திருப் பாடல். இங்ஙனம் சூழலை மாற்றியமைத்துக்கொண்டு சிவச் சூழலிலேயே சிவ வாழ்வைத் தவ வாழ்வை வாழ்ந்து காட்டிய பரமாசாரிய சுவாமிகள் அவர்கள். அதனாலேயே நடையருப் (பிசகாத) பெருந்துறவை இருபதாம் நூற்றாண்டிலும் வாழ்ந்து காட்டியவர்கள்.

**அறங்களின் அன்னை :**

காஞ்சியில் காமாட்சித் தாயிடம் கண்ணுதற் பெருமான் இரண்டு படி நெல்லைக் கொடுத்து முப்பத்திரண்டு அறங்களையும் செய்யச் சொன்னாராம். நெல்லைக் கொடுத்தால் நிலமில்லாமல் என்ன செய்வது அதற்காக அவரே காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சுவாமி களிடம் நிலபுலங்களை மிருதியாக அளித்துக் காலத்திற்கு ஏற்ற வாறு அறம் பல செய்க என அருளியிருப்பார்போலும்; அதனால் சுவாமிகள் அறக்கட்டளைகள் பலவற்றை அமைத்தார்கள். அவை பெரும்பாலும் உயிரைப் பற்றி நிற்கும் அறியாமையிருளை அகற்றி ஞான உழைப்பைத் தந்து அறிவுப் பசியை அளிக்கும் கல்விப் பணிகளும் உடற்பசியைப் போக்கும் அன்னதானக் கட்டளைகளுமே.

அறங்கள் அனைத்தின் பலனையும் அனுபவிப்பவர்கள் மக்களேயானாலும் அறங்களைச் சிவபெருமானுக்கென்று கொடுப்ப வரும் மடுப்பவரும் புத்தி செய்து விட்டால் அவை அரன்பணி யாகின்றன. சுருங்கச் சொன்னால் மக்களுக்கு என்று செய்தால் அவை பசு புண்யமாகின்றன. பசுக்கள் யார்? மகேசன் உறை யுங்கோயில்கள். ஆகவே மக்களாகிய மகேசன் உறையுங் கோயில்களுக்கும் - மக்களுயிரை இடமாகக்கொண்டு உறையும் இறைவனுக்கும் பணி செய்கின்றோம் என்று மாற்றிப்புத்தி பண்ணினால் அவைபதி புண்ணியம் ஆகின்றன. இந்த உண்மையை உளங்கொண்டு ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள்

அங்கங்கே அடியார்கள் திருநாட்களில் அன்னதானமாக அரன் விழாக்காலங்களில் வழிபாட்டிற்கென்று வரும் அடியார்கள் உட்கொள்ளும் அருமருந்தாக - சிவஞானப் பேறளிக்கும் செந் தமிழ்க் கல்விக் கட்டளைகளாக அமைத்து எங்கும் - என்றும் சிவனறமே செழிக்கச் செய்துவந்தார்கள். ஆதலால் அவர்கள் அறம் வளர்க்கும் அன்னையாக விளங்கினர்கள்.

## நேர்மையின் சிகரம் :

வாழ்விலே தன்னலம் தலைக்காட்டாதவரை நேர்மையும் நீதியும் நிலைத்து நிற்கும் என்ற உண்மையை உளங்கொண்டு சுவாமிகள் மிதமான உணவு - இதுதான் வேண்டும் என்ற பற்றுவையாத உணவு, பொறி புலன்களைத் தூண்டாத சுத்த சாத்துவிக உணவு உட்கொண்டு மன்யானையை திருவடிக் கந்திலேயே பிணித்து வைத்தவர்கள் என்பதை அவர்களுடன் சிலநாட்கள் பழகியவர்களும், ஏன்? அவர்கள் வாழ்க்கையின் போக்கை மேற்போக்காகக் கண்டவர்கள் கூட அறிவார்கள். சுத்த சாத்துவிக உணவும் - தூய சிந்தையுமே அவர்களை நேர்மையின் சிகரமாக விளங்கவைத்தது.

நிர்வாகம் என்ற போர்வைக்குள் புகுந்தவுடனேயே மக்கட் பண்பு சிலரைத்தாக்கவும், சிலரைத் தூக்கவும், சிலரைப் போற்றவும், சிலரைத் தூற்றவும் செய்யும். வசவும் வாழ்த்தும் தோன்றச் செய்யும். இவர்கள் அருளாட்சியை ஏற்றுச் சுமார் முப்பதாண்டுகள் ஆயின. இவ்வளவு பெரிய நிர்வாகத்தில் இத்தனை பேரை வைத்துப் பணிகொள்ளும்போது தவறும் பணியாட்களை வையத்தான் நேரும்; வசவு வைவார் வாழ்வின் பிரதிபலிப்பாக இருக்கும். இவர்கள் ஆட்சிக்காலத்தில் பெருந் தவறு செய்தார்களையும் மனநொந்து பொறுப்பார்களேயன்றி வைதது கிடையாது. 'தீய வழுக்கியும் வாயாற் சொலல் ஒழுக்க முடையார்க்கு ஒல்லா' என்ற வள்ளுவம் இவர்கள் வாழ்வில் இயல்பாகவே அமைந்துவிட்டது எனலாம். அதுமட்டுமல்ல வசவு சாபத்தைப்போலத் தவத்தைக் குறைக்கும் என்ற உள்ள மும் உடையவர்கள். தவறுபவன் அவன் பாவத்தையவன் கட்டிக்கொள்கிருன். அதனை நாம் ஏன் கட்டிக்கொள்ள வேண்டும் என்பார்கள். இத்தகைய மனபரிபாகமே அவர்களை நேர்மையின் சிகரமாக விளங்கச்செய்தது.

## புகழ்ச்சி வேண்டாப் புண்ணியன் :

உள்ளத்துறவு பூண்டாருக்கும் புகழ்ச்சியில் பேராசை யிருக்கும், அதற்காக எதனையும் செய்யப் பின் வாங்கமாட்டார்கள்

புகழ்ச்சி ஒரு மாயவலை, அதிற் சிக்காத சிலர்கள் இருக்கவே முடியாது. ஏன்? சிவபெருமான் கூடப் புகழ்ச்சியில் விருப்ப முடையவர் என்றுதானே பெரியோர்கள் சொல்கிறார்கள். "புகழ்ச்சி விருப்பன்போலும்" என்கின்றாரே சிவப்பிரகாச சுவாமிகள், ஸ்தோத்திரப்பிரியாய நம: என்கிறதே இறைவனுடைய ஆயிரம்பெயர்களில்ஒன்று. ஆகவே யாரும் புகழ்ச்சிக்குப் பலியாகாமல் இருக்கவியலாது. இப்போதும் பார்க்கிறோமே, அறஞ்செய்வார் எவரும் அடுத்த நாள் பத்திரிகையைத் தானே பார்க்கிறார்கள். அத்தகைய இருபதாம் நூற்றாண்டிலே ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிகள் அவர்கள் தெளிந்ததொன்றைப் பிறர்போற்றுதற்காக மட்டுமன்றிச் 'சிவனருள்' என்ற உறுதியோடு செய்து வந்தமையை உலகம் அறியும். ஸ்ரீ காசியில் பரிபூரணமாகின்ற 18—5—72 தேதிக்குச் சில நாட்களுக்குமுன்கூட ஒர றக்கட்டளைக்கு உறுதிச் சீட்டு எழுதிக் கையெழுத்திட்டு அனுப்பிவிட்டு நிறைவெய்தினார்கள் என்றால் அவர்களுடைய உள்ளப்போக்கு பரிபாகம் நாம் உணர்ந்துய்யக்கூடிய ஒன்றன்றோ!

## திருமுறைகட்கு உயிர்தந்த உயர்ந்தோர் :

ஆங்கிலம் படித்தும் பலதுறைக்கல்விகளைப் பயின்றிருந்தும் இவர்கட்குத் திருமுறைகளிலிருந்த பற்று அளவு கடந்தது. பற்றிருக்கலாம்; கேட்டு மகிழலாம்; பாடிப் பரவசமாகி மகிழ முடியாது. ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் தாமே பாடிப் பாடிக் குழைந்துருகுவார்கள். அம்மட்டோ! திருமுறை ஒலி காசிமுதல் கன்னியாகுமரி வரையில் சிறந்த தலைநகரங்களில் ஒலித்துக் கொண்டேயிருக்க வேண்டும். "ஓசையொலியெலாம் ஆனாய் நீயே" என்பது அப்பர் சுவாமிகள் அறிவுரை. ஆதலால் எங்கும் அரனுமையோங்கவேண்டும் என்ற பேருள்ளம் பூண்டு அங்கங்கே சிறந்த ஓதுவாமூர்த்திகளை நியமித்துச் சிவ ஒலியைச் செழிக்கச்செய்து வந்தார்கள். அதனால் திருமுறை ஆங்காங்கு வாழ்கிறது. வளர்கிறது.

இவ்வண்ணம் அறம்பல புரிந்த பெரியவர் அன்பின் திருவுரு; சிவஞானி சென்ற குருவாரத்தன்று சிவபரிபூரணம் எய்தினார்கள். சுக்கிரவாரத்தன்று அருள் வடிவாகிய கங்கையிற் கலந்தார்கள் என்ற செய்தி ஞான நிலையில் நற்செய்தியேயாகும். பரிபூரணம் எய்துதல் என்பது ஒருடலில் ஒதுக்கிருந்த ஒருயிர், பரியாய விசேடத்தால் எங்கும் நீக்கமற நிற்கின்ற பெருநிலை எய்திற்று என்பதுதானே பொருள். ஆதலால் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் காட்சி

யுலகிற் கரந்தாலும் அறிவுலகில் நம்மனைவருடைய உள்ளக் கோயிலிலே நின்று நிலவுகிறார். சிவானந்தப்பெருவாரியில் திளைக்கின்றார்கள்.

இடையீடில்லாத (அவிச்சின்னசந்தான) பரம்பரை என்பது உபதேச பரம்பரையை நிலைபெறுத்தல் என்பதுதானே. ஆதலால் அவர்கள் தமக்குப்பின்னே அறங்களை அறிந்தாற்றக் கூடிய ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களை அருளாட்சி செய்யும்படி பணித்து எங்குமாய்நின்று திருக்கண்ணோக்கு அருளிவருகின்றார்கள். அன்றைய ஆட்சி பொறிகட்குப் புலனானவரை நடந்தது. இன்றைய ஆட்சியோ எங்குமாய்நின்று எல்லாவற்றையும் ஒருசேர உணருகின்ற பெரிய ஆட்சி ஆதலால் அவர்கள் ஆட்சி நின்று நிலவுக. அவர்கள் இறைவன் திருவடியிலே என்றும் இன்பம் பெருக இருக்க.

---

## EXTRACT FROM THE VISIIORS' BOOK

### Dharmapuram Adhinam
### Sri Kambakareswaraswamy Devasthanam, Thirubuvanam.

இன்று மாலை குடும்பத்துடன் சரபேந்திரர் தரிசனம் திருபுவனத்தில் கிட்டியது. கிருத்திகை நாளாகையால் ஸ்ரீமுருகனுடைய சந்நிதானத்தில் ஷண்முக அர்ச்சனையைப் பார்க்கும் பேறு பெற்றோம். எப்போதும்போல கோயில்சுத்தமாகவும் அழகாகவும் இருந்தது. கோவில்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு முன் உதாரணமாக தருமபுரத்து மடத்தில் கோவில்கள் அமைத்துள்ளார்கள். இறைவன் அருளால் எல்லா நலனும் விளங்க பிரார்த்திக்கிறேன்.

(ஒ-ம்.) நா. மகாலிங்கம்,
19—3—72. ( தொழிலதிபர், பொள்ளாச்சி )

நானும் என் குடும்பமும் இன்று இந்தக் கோவிலுக்கு வந்திருந்தோம். இந்தக் கோவில் சக்தி வாய்ந்ததும், மிகவும் புராதனமானதுமான கோவிலுமாகும். சரபேஸ்வரமூர்த்தி இந்த நாட்டிலேயே அதிசயிக்கத்தக்க விக்கிரகமாகும். மக்கள் எல்லோரும் இக் கோயிலையும் சிற்பங்களையும் பார்த்துப்பயன் பெறுவார்கள் என நம்புகிறேன்.

( Sd. ) பாலகிருஷ்ணன் I. A. S.
24—2—72. துணை ஆட்சியர்,
கும்பகோணம்.

# ஸ்ரீ அருள்நந்தி முனிவர்

வித்துவான், திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்

**தோற்றமும்-உறமும் :**

'பாண்டி நாடே பழம்பதி' எனப்புகழ்பெற்ற தென்பாண்டி நாட்டிலே திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த அரியநாயகி புரத்தில் தொண்டை மண்டல சைவ வேளாளர் மரபில் சார்வரி ஆண்டு ஆவணித் திங்கள் 19ஆம் நாள் திங்கட்கிழமை மூல நன்னாளில் (கி. பி. 1899 செப்டம்பர் 3-ல்) ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தோன்றினார்கள். இவர்கள் இளமையிலேயே செந்தமிழும் ஆங்கிலமும் சிறப்புறக் கற்றுத் தேர்ந்தவர்கள்; பன்னிரு திருமுறைகளையும் ஓதி உணர்ந்தவர்கள்; சைவசமய நெறியில் ஒழுகியவர்கள்; சிலகாலம் அரசாங்க உத்தியோகத்தை வகித்து வந்தவர்கள்; பின்னர் உலகப்பற்றை விட்டுப் பழவினையின் துணையினால் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து 23வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகளை அடைந்து ஞானோபதேசமும் துறவும் பெற்றவர்கள்; தருமை ஆதீனத்துத் திருக்கோயில் பலவற்றில் கட்டளைத் தம்பிரான் சுவாமிகளாக வீற்றிருந்து ஆலயபரிபாலனம் செய்து புகழ் பெற்றவர்கள். அதுபோது திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 19-வது அதிபராக வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சிவப்பேறு அடைய, 26—3—1944ல் இவர்கள் ஸ்ரீ காசி மடத்து 20-வது அதிபராக எழுந்தருளினார்கள்.

**அருளாட்சி :**

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஸ்ரீகாசி மடத்து அதிபராக எழுந்தருளியது முதல் நாளிது வரை ஒரு கோடி ரூபாய்க்குமேல் பேரறக் கட்டளைகள் பலவற்றை நிறுவிப் பரிபாலித்து வந்துள்ளார்கள். பற்பல சிவாலயங்களில் தேவாரக் கல்வெட்டுக்களும், சிவ சிவ ஒளி விளக்குகளும் அமைத்ததுடன் தேவாரம் விண்ணப்பிக்கும் ஓதுவாமூர்த்திகளையும் நியமித்தருளினார்கள். அடக்க விலையில் சைவத் திருமுறைகள் பன்னிரண்டையும், திருக்குறள் முதலிய பல நூல்களையும் பதிப்பித்து வழங்கினார்கள். பற்பல இடங்களில் அந்தணர் அருந்தவர் முதலியோர்களுக்கு அன்னம் பாலிப்பு நடைபெறச்செய்த புண்ணிய சீலராவர்.

திருச்சிராப்பள்ளித் தலத்தில் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் நினைவுப் பரிசு நிதி ரூ 5000—00. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு நிதி ரூ. 5000—00. ஸ்ரீ தாயுமானஈசர்க்கு நாடோறும் காவிரித் திருமஞ்சன நிதி ரூ. 1000—00 ஸ்ரீ தாயுமானஈசர் தேவார நிதி (ஆவணிமூலம்) ரூ. 18000—00. திருக்கேதார யாத்திரை நிதி (திருமுறை வகையரு பல பொது) ரூ. 100000—00 ஸ்ரீ தாயுமானஈசர் அபிஷேகம் நிதி (சிவராத்திரி) ரூ. 1000—00 ஆகியவற்றிற்கு முதலீடு செய்துள்ளார்கள். ஸ்ரீ தாயுமான ஈசர்க்கு நாடோறும் சாயரட்சையில் பால் அபிஷேகக் கட்டளையும், ஸ்ரீ தாயுமானஈசரை உச்சிக்காலத்தில் பூசிக்கும் சிவாச்சாரியர்க்கு நாடோறும் படிக்காசு ரூபாய் ஒன்று விதம் வழங்கும் கட்டளையும் நியமித்துள்ளார்கள். திருவானைக்காவில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னம் பாலிப்பு நிதி (வைகாசி திருதியை) ரூ. 7000—00. ஸ்ரீ ஜம்புகேசுவர சுவாமியைப் பூசிக்கும் பண்டிதர்களுக்கு நாடோறும் படிக்காசு வழங்க நிதி ரூ, 5000—00 திருச்சிராப்பள்ளியை அடுத்த விராலிமலை என்னும் முருகன் தலத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னம் பாலிப்பு நிதி (வைகாசித் திருதியை) ரூ 5000—00. ஆதி வயலூரில் ஸ்ரீ அருணகிரிநாதர் புனற்பந்தர் நிதி (பங்குனி, சித்திரை) ரூ. 2000. திருப்பைஞ்ஞீலி சிவத்தலத்தில் ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் புனற்பந்தர் நிதி (சித்திரை, வைகாசி) ரூ. 1500. நியமித்த அருட்செல்வர் ஆவர்.

## குண நலன்கள் :

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் பேரறங்கள் பல நிறுவி நடைபெறத் திருவுளம் கொண்டவர்கள்; இடையருது சிவசிந்தனை உடையவர்கள்; பற்பல சிவாலயங்களில் சிவ சிவ ஒளி விளக்குகளை அமைப்பித்து மக்கள் அனைவரும் சிவ சிவ என்று கூறும் எண்ணத்தை இயல்பாக உண்டாக்கியவர்கள், நல்லொழுக்கத்தை விழுப்பமாகக் கொண்டவர்கள்: விருப்பு வெறுப்பு இரண்டும் அற்றவர்கள்; இமயத்தில் உள்ள திருக்கேதாரம் முதல் கன்னியாகுமரி இராமேசுவரம் வரையிலுள்ள சிவத்தலங்களை முறையாக வழிபட்டவர்கள்; தமது குருவைத் தவிர துறவுநிலை கொள்ளுதற்கு முன்னிருந்த உறவினரை உறவினர் ஆகார் என்ற பெருங்கொள்கை உடையவர்கள்; திருச்செந்தூர் செந்திலாண்டவன் இடத்தில் நீங்காப் பேரன்பு பூண்டவர்கள்; காசிவாசி என்பதற்குஏற்ப ஒவ்வொரு ஆண்டிலும் பற்பலமாதங்கள் காசியில் தமதுகுமாரசாமிமடத்தில்வீற்றிருந்து அங்குள்ள அறங்களைப் பரிபாலித்து வந்தவர்கள்; ஒருகோடி ரூபாய்க்குமேல் முதற்பொருள் வைத்து 533 பேரறக் கட்டளைகள்

நியமித்தவர்கள் ; குணமென்னும் குன்றேறி நின்று கொடைபல வழங்கிய ஈகையுடையவர்கள் ; இவர்கள் திருவடிபட்ட இடங்க ளெல்லாம் புனிதத் தலமாக விளங்குவன ; அருள்கொண்டு அளித்த பொருள்கள் எல்லாம் மலைபோல உயர்ந்து விளங்கிப் பெருகுவன. இவர்கள் தூய திருவுளம் கொண்டவர்கள் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

முடிவுரை :

இத்தகைய புண்ணியசீலரும், பேரருளாளரும் ஆகிய ஸ்ரீலஸ்ரீகாசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 28ஆண்டுகள் ஸ்ரீகாசிமடத்து அதிபராகத் திகழ்ந்து பெரும்புகழ் பெற்றுக் காசித்தலத்தில் (வாரணாசியில்) பரிதாபி ஆண்டு வைகாசித் திங்கள் 5-ஆம் நாள் (18—5—1972) பூர்வ பட்சம் சஷ்டி திதியில் பரிபூரண நிலை அடைந்தருளினார்கள். இவர்கள் திருமேனி காசிக் கங்கா நதியில் ஜலசமாதி ஆயிற்று. இவர் களுக்கு முன் தொடக்கத்தில் இருந்த ஐந்து அதிபர்களும் கங்கையில் ஜலசமாதி ஆனவர்களே ஆவர்.

அருள்நந்தி முனிவர் திருவடிகள் வாழ்க ! வாழ்க ! இவர்கள் நியமித்த பேரறக்கட்டளைகள் ஓங்கிவளர்க.

ஸ்ரீ காசிமடத்தில் இவர்களின் இளவரசாக இருந்து 21-வது அதிபராக 18—5—72 முதல் திகழும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க ! இவர்களின் அருளாட்சி ஓங்கி வளர்க !

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

I had the pravilege of worshipping at the Vaithiswarankoil. It is an imposing temple beautiful built. The idols are commanding respect and devotion. They are very attractive. The temple is kept very clean. The worship here is a pleasure.

(Sd.) K. S. Hedge,
Judge of the Supreme Court
of India.

5...6...72.

# வாழ்த்தும் அஞ்சலியும்

P. முத்துக்குமரசாமி,
ஊராட்சிமன்றத்தலைவர்,
மாரியம்மன்கோவில் அஞ்சல்,
தஞ்சாவூர். 19—11—71.

வணக்கம்,

தாங்கள் ஆதீன கர்த்தராக வரவேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு ''வைத்தீஸ்வரன்கோயில்'' மகாகும்பாபிஷேகத் தன்று ஏற்பட்டது திருநாவலூர் கும்பாபிஷேக சம்பந்தமாக ''தாங்கள் அருளிய சொற்பொழிவின் சாராம்சத்தின் பயனுக'' இந்த தருமபுரம் குருபீடம் அமர்ந்து எங்களுக்கு மேன் மேலும் ஊக்கமும் உற்சாகமும் கொடுக்க ஆண்டவன் திருவருள்பெற வேண்டுமென்ற குறிக்கோள் விரைவில் கிடைத் தது பற்றி மிக்க சந்தோஷம். ''கயிலைக் குருமணிகள் அவர்கள்'' நடந்தி வந்த தொண்டைவிட தாங்களும் நல்ல திட்டங்களை உருவாக்கி ஆதீன சம்மந்தப்பட்ட ஆலயங்களின் பொறுப் பினையும், மற்றும் பொது தொண்டினையும் நல்லமுறையில் செயலாற்றி வர வேண்டிக் கொள்கிறோம், தங்களை நேரில் கண்டுகொள்ளாமைக்கு மன்னிக்கவேண்டும்.

தாங்கள் குருபீடமேற்ற பட்டணபிரவேசம் செய்யும் கண் கொள்ளாக் காட்சியளித்து புகழ் ஓங்கி வரவேண்டுகிறோம்.

பேராசிரியர், வ. பெருமாள்,
எம். ஏ. பி. டி., எம். ஆர். ஏ. எஸ்.,
தமிழ்ப்பேராசிரியர்,
முதல்நிலைக் கல்லூரி, உரிகம்,
கோலார் தங்கவயல், (மைசூர் மாநிலம்.) 15—11—1971.

வணக்கம். தாங்கள் தருமை ஆதீனத்தின் 26 ஆவது மகா சந்நிதானமாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள நற்செய்தி அறிந்து பெரிதும் அகமகிழ்ந்தேன். தங்களுக்கு என் அகங் கனிந்த பணிவான நல்வாழ்த்துக்கள் உரியன.

தங்கள் அரும்பெருஞ் சீரிய தலைமையில் தருமை ஆதீனம் மேலும் சிறந்தோங்கி வாழ்க ; வெல்க ; உயர்க. வணக்கம். மிக்க நன்றி.

P. A. C. R. Ramasubramania Raja B. Sc.,

"RAMAMANDIRAM"

Rajapalaiyam S. Ry.

24—11—1971.

பெரு வணக்கத்திற்குரிய மகாசந்நிதானம் அவர்களின் தரிசனமும், சற்று நேரம் அவர்களுடன் அளவளாவி அருளுரை கேட்கும் பேற்றினையும் பெற்றதை யான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

பல்லாண்டுகளாக சைவ சமயமும், தமிழ் மொழியும், இரு கண்களெனக் கருதித் தொண்டு புரிந்து வரும் தருமை மடத்தின் சேவையைப் பற்றிக் கூறுவது எளிதல்ல. மடத்திற்குட்பட்ட ஆலயங்களைச் சீராகவும், தூய்மையாகவும் வைத்திருப்பதில் நிகரற்று விளங்குவது தருமை மடம் என்று சொன்னால் மிகையாகாது. கற்றவர்களை வரவேற்று அவர்கள் கல்வித் திறமைக்கு மதிப்புக் கொடுத்து, அதைப் பரிமளிக்கச்செய்து, பாராட்டிக் கவுரவித்த ஆதீனம் தருமை ஆதீனம்.

என்னுடைய தந்தையார் அமரர் உயர்திரு ராமசாமி ராஜா அவர்கள் தருமையாதீனத்துடன், 25 ஆவது குருமகாசந்நிதானம் பட்டத்திலிருக்கும்பொழுதே தொடர்பு கொண்டவர். அடிக்கடி ஆதீனம் சென்று தன் தொழில் முயற்சிகளுக்கெல்லாம் ஆசிபெற்று வருவதில் பெரு விருப்பமும், ஆதீன கர்த்தர்களின் அருளுரைகளைச் செவிமடுப்பதில் பேரார்வமும் கொண்டவர். குறிப்பாக அண்மையில் முக்தியளிக்கும் க்ஷேத்திரமாகிய காசியில் இயற்கை எய்திய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எங்கள் தந்தையார்பாலும், என்பாலும் காட்டிவந்த பரிவுக்கு நாங்கள் என்றென்றும் கடமைப்பட்டவர்களாவோம், அருட் பேழையாகவும், அறிவுக் கருவூலமாகவும், பக்திச்செம்மலாகவும் மகாசந்நிதானம்விளங்குகிறார்கள். மேலும் மகாகவி பாரதியார், சமய மடங்களின் செல்வத்தைத் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டுமென்று கூறியதன்படி நடந்து காட்டியவர்கள்.

சென்னையில் தருமபுரம் ஆதீன சமயப்பிரசார நிலையத்தை உருவாக்கி, சிறப்புற நிர்வகித்து பக்தித் தொண்டும் சைவ சமய இலக்கியத் தொண்டும் புரிந்து, இன்று மடாதிபதியாக எழுந்தருளியிருக்கும் மகாசந்நிதானத்தின் தலைமையில் தொடர்ந்து ஆதீனம் அறப்பணிகளைச் சிறப்புற ஆற்றிட வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். ஆதீனம் செய்து வரும் அறப்பணிகளுக்கு உறுதுணையாக நானும் என் குடும்பத்தாரும் இருப்போம் என்று கூற விரும்புகிறேன்.

ந. ரா. முருகவேள், சென்னை * 34.
எம். ஏ. எம். ஓ. எல். 19—5—1972.
ஆசிரியர், திருக்கோயில்.

ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் அவர்கள், காசியில் பரிபூரணம் எய்திய செய்திகேட்டு, அளவிலாத் துக்கம் அடைந்தேன். எதிர் பாரா நிலையில், இவ்வளவு விரைவில், அவர்கள் பரிபூரணம் எய்தி, நம்மையெல்லாம் விட்டு மறைந்து விடுவார்கள் என்று எவரும் நினைத்திரார்.

" தகுதியுடைய சிறந்த ஒருவரைத் தருமையாதீனக் குருமுதல் வராக தேர்ந்தெடுத்து அமைத்துவிட்டோம்; நமது புனிதம் மிக்க கடமையினை நிறைவேற்றிவிட்டோம்; நமது தலையாய பெரும்பணி செவ்விதின் நிறைவு பெற்றது " என்ற ஆறுதல் உணர்வுடன், அவர்கள் இத்துணை விரைவில் இறையருட் பேறு தலைக் கூடினர்கள் போலும்.

தவநலம் சிறந்த சைவப்பெருஞ் சான்றோராக விளங்கி, எத்துணையோ பல எண்ணில்லாத அறக்கட்டளைகளை நிறுவி யருளிய அவர்களின் அருமை பெருமைகளை நினைக்குந்தோறும் அவர்களின் மறைவு அளவிலாப் பெரு வருத்தத்தை விளைவிக் கின்றது.

பக்திக் கடலே ! குணக் குன்றே !
பாசப் பகையே ! எம் உறவே !
முத்திக்கரரே ! சிவானந்த
முதலே ! ஞான மணிவிளக்கே !
சித்திப் பொருளே ! அருள்நந்தித்
தேனே ! நின்னைத் தொழும்அடியார்
புத்திக் கமுதே ! யாவர்நினைப்
போல்வார்! அவரை அறியேமால் !

என்னும் பாடலை நினைந்து, சொல்லிச் சொல்லி, என் உள்ளம் பெரிதும் உருகி மறுகி நிற்கின்றது.

அண்மையில் யான், ஒருமுறை திருப்பனந்தாளுக்குச் சென்றிருந்தபோது, ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் அவர்கள், பல புத்தகங்களைக் கொடுத்து, ஒரு புத்தாடையைப் போர்த்தி, பெரிய நெய் விளக்குத் தீப கலசம் ஒன்று புதிதாக அளித்துத்,

தண்ணளி புரிந்ததுடன், கோயில்களில் நெய்விளக்குத் தீபம் ஏற்றுவது முதலியனபற்றி விரிவாக உரையாடி மகிழ்வித்தார்கள். அதனை நினைக்கும்போது, இனி ஒருகால் அவர்களைக் காண்போமோ ? அவர்தம் அருளாசியினைப் பெற இயலுமோ ? என்று நினைத்துப் பெரிதும் வருந்துகின்றேன்

எனினும், அவர்களின் பிரதிநிதியாக, அவர்களின் முழு ஆசியுடன், அவர்கள் எழுந்தருளியிருந்த, பீடத்தினை ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், அணி செய்யும் வகையில் அருளாட்சி ஏற்றுவிட்டமை அறிந்து, என்னனையோர் உள்ளங்கள் ஒருவகையில் ஆறுதலடைகின்றன.

எல்லாம் வல்ல நம் செந்திலாண்டவன் திருவருளால், ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் அடிச்சுவட்டினைப் பின்பற்றி, அவர்கள் நிறுவியருளிய அறக்கட்டளைகளை மேன்மேலும் பெருகவளர்த்து, ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நீடினிது வாழ்ந்து, சைவமும் தமிழும் புரந்தருளுதல் வேண்டுமெனத் திருப்பனந்தாள் செஞ்சடையப்பரின் திருவடிகளை மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றேன்.

B. S. சிவகுருநாதன் — தஞ்சாவூர் - 7,
B. A., B. L., — 16—3—1972.
டிரிபுனல் நீதிபதி.

குருமகாசந்நிதானம் எனக்கு அன்புடன் ஆசீர்வதித்து அளித்த 'குருவழிபாடு' என்ற நூலைப்படித்தேன். காரில் வரும்போதே படித்து முடித்தேன். திரும்பவும் படித்தேன். நூல் வெகு அழகாக அமைந்து இருக்கிறது.

தற்காலத்தில் ஆங்கில பெரிய நூல்களின் சாராம்சங்களைச் சுருக்கமாக, மக்கள் வசதியாகப் படிக்க பிரசுரம் செய்கிருர்கள். அத்தகைய முறையில் 'குருவழிபாடு' என்னும் நூல் அமைந்திருக்கிறது.

நூலை முதல்பக்கம் முதல் கடைசிப்பக்கம்வரை ஒரே மூச்சில் படிக்க ஆர்வம் ஏற்படுகிறது. 'குரு வழிபாடு' என்னும் நூலில் விஷயங்கள் கையாளப் பட்டிருக்கும் முறை, படிப்போர்க்கு ஆர்வத்தையும் சைவசமயப் பற்றுதலையும் ஏற்படுத்தும் வகையில் இருக்கிறது.

'குரு வழிபாடு' நூலில், சைவசமய வளர்ச்சியின் வரலாறு, தருமை ஆதீனத்தின் ஆதி குருமகாசந்நிதானத்தின் அருள் வரலாறு, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்களின் அருள் வரலாறு ஆகிய இவைகளைப் படிப்போர் எளிதில் கிரகிக்கும் முறையில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வாறு அமைந்தமைக்கு என் பாராட்டுக்கள்.

இத்தகைய நூல்களை மேலும்மேலும் பிரசுரித்து, சிவநேசச் செல்வர்களும், மாணவ மாணவிகளும், ஏனையோரும் படித்துப் பயனடையச் செய்ய குருமகாசந்நிதானம் திருவுளம் கொள்ள வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

## தெ. மரகதம்சுப்பிரமணியம்

அம்பாசமுத்திரம்
2—6—72.

இன்று காலை மகாசந்நிதானத்தில் நிகழ்த்திய 'அறஉரை' "குறளில்" சிவஞானபோதம் உள்ளடங்கியது என்பதை மிகத் வும் தெளிவாக எடுத்துக்காட்டியது. "தலை" என்ற சொல் லுக்குக் கூறியருளிய விளக்கம் மிகப் பிரமாதம். குருபூசை விழா நாளாகிய இன்று இரவு குருமகாசந்நிதானம் கொலுவில் விற்றிருக்கும் சமயம் சைவமகன் தலையாலே வணங்கி ஆக வேணும். தருமை ஆதீனம் இவ்வுலகில் தலைசிறந்து விளங்கும் என்பதற்கு ஐயமில்லை.

தருமைஆதீனம் மகாசந்நிதானம் அவர்கள் பல ஆண்டுகள் விற்றிருந்து "சைவம்" ஓங்கவும் மக்கள் சிவஞான புருடர்களாக வாழவும், சைவ மக்களுக்கு வழி செய்யவும் எல்லாம் வல்ல சொக்கலிங்கப் பெருமான் அருள்புரியப் பிரார்த்திக்கின்றேன்.

## வ. சா. சாமிநாதன் செட்டியார்

ஆத்தங்குடி,
2—6—72.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இன்றுகாலை ரேடியோவில் அருளிய அருள்வாக்கைத் திருச்சி அலைவரிசையில் கேட்டேன். தாங்கள் அறஉரை சொன்னீர்கள். சொன்ன நேரம் சில நிமிஷங்கள்தான். தாங்கள் சொன்னவிதம் மிகவும் நன்முக இருந்தது. இதுபோல் அடிக்கடி திருக்குறளில் உள்ள வேறு குறள்களுக்கும் விளக்கம் கேட்கும் நாளை எதிர் பார்த்து இருக்கிறேன்.

# செய்திகள்

தருமையாதீன ஸ்தாபகர்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசைப் பெருவிழா

தருமையாதீனம், ஸ்ரீ குருஞானசம்பந்தர் தோற்றுவித்தருளிய ஞானபீடம். திருக்கயிலாய பரம்பரையில் தென்னாட்டில் சமய விளக்கம் கண்டருளும் இத்திருமடத்தின் குருமுதல்வரின் குருபூசைப் பெருவிழா 2—6—72 வெள்ளியன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பங்குனி உத்திரத்திருநாளில் குருபூசைத் திருமுகம் எழுதுவது ஆதீன மரபு. அந்நாள் முதல் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் குருபூசை விழாவைச் சிறப்பாக நடைபெறுத்துவதற்குரிய சிந்தனைகளையே திருவுளம்பற்றுவார்கள். ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் எழுதப்பெற்ற முதல் திருமுகம் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளுக்கு முறைப்படி அனுப்பப்பெற்று ஆதீன மரபுப்படி திருமுகங்கள் திருமடத்தின் சீடர்களுக்கு ஓதுவாமூர்த்திகளைக்கொண்டு வழங்கப் பெற்றன. ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதி கூடிய இடம் மிகப்பெரிய திருக்கோயிலாக வேதசிவாகமநெறி முறைப்படி நித்திய நைமித்திக விழாக்களோடு சிறந்து விளங்குகிறது. சுவாமி, அம்பாள், பஞ்சமூர்த்திகள் முதலிய பரிவாரங்களுடன் சிறந்து திகழும் இத்திருக்கோயில் திருவிழா குருபூசையின் முன் பத்து நாட்களில் நிகழும். இம்மரபுப்படி பெருவிழா சிறப்புற நிகழ்தற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பெற்றன, தருமைத் திருநகர் விழாக்கோலம் பூண்டது. 24—5—72 அன்று கொடியேற்றுவிழா. சிறந்த சித்திர வேலைப்பாடுகளுடன் முகப்பு அமைத்து பந்தல் வேயப் பெற்றது. விதானங்களாலும் மின் விளக்குகளாலும் பந்தல் அழகுறுத்தப்பெற்றது நான்கு வீதிகளும் தூய்மை செய்யப்பெற்றுத் தோரணங்கள் கட்டப்பெற்றன. மாயூரம் நகராட்சியின் பேருந்து தருமைத் திருவீதிகளைத் தண்ணீர் தெளித்துத் தூய்மை செய்து உதவியது. குருபூசை விழாவை முன்னிட்டு சமயப் பயிற்சி வகுப்பும் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் சிறப்பாக நடைபெற்றன.

குருபூசை விழாவை முன்னிட்டு ஆதீன தேவஸ்தானப் பணியாளர்கள் திருமடத்திற்கு வந்தனர். அவ்வவரும் தத்தமக்களித்த பணிகளைச் செம்மையாக நிறைவேற்றினர். வேலை நியமனப் பட்டியல் வெளியிடப்பெற்று மேற்பார்வை கள் செய்யப்பெற்றன.

24—5—72 புதன் காலை 9 மணிக்கு ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் பஞ்சமூர்த்திகளும் எழுந்தருளி அருட்காட்சி வழங்க கொடியேற்று விழா நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நி தானம் அவர்கள் எழுந்தருளியிருந்து தரிசித்து மிகச்சிறப்பாக விழாவைத் தொடங்கி வைத்தார்கள்.

சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் திருவிழாத் தத்துவங்களை அன்பர்களுக்கு விரிவுரையாக விளக்கம் கூறினர் கள். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு. திரு. S. மகராசன் அவர்கள் மற்றும் மாயூரம் முதலிய நகரப்பெருமக்கள் ஆதீன சிப்பந்திகள் அனைவரும் விழாவைக் கண்டுகளித்து இன்புற்றார்கள்.

நாடோறும் காலை மாலை இருவேளைகளிலும் பஞ்சமூர்த்தி கள் சிறந்த மேளவாத்திய இன்னிசைகளுடன் திருவீதிக்கு எழுந்தருளி அருட்காட்சியை வழங்கும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன

காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளி சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தினார்கள்.

30—5—72 செவ்வாய் திருக்கல்யாண மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 1—6—72 மாலை திருத்தேர்விழா. அன்பர்கள் பல்லாயிரவர் இதில் கலந்துகொண்டு தரிசித்து இன்புற்றனர்.

2—6—72 வெள்ளி ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசை விழா. காலை 6 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மேல வீதியில் உள்ள ஸ்ரீ ஆனந்தபரவசர் குருமூர்த்த ஆலயத்திற்கு எழுந்தருளி குருமூர்த்தங்களைத் தரிசித்தார்கள். திருக்கோயில் களின் பிரசாதங்கள் பார்க்கப்பெற்றன. காலை 10 மணிக்கு ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை கள் நிகழ்ந்தன. பிரசாத நான்மணிகள், ஸ்ரீ குருஞான சம்பந்தர் (ஆங்கிலம்) நூல்கள் விழா மலராக வெளியிடப் பெற்றன. அன்பர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இண்டைசார்த்திப் பிரசாதங்கள் வழங்கியருளினார்கள்.

காலை 12 மணிக்கு ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அபிஷேகப் பொருள்கள், பன்னீர், 1008 சேர் பால் அபிஷேகம் செய்யப் பெற்றது. அன்பர்களுக்கு 'அபிஷேகம் செய்த சிவஞானப்பால் வழங்கப் பெற்றன. திருமுறைப் பாராயணம் இடைவிடாமல் நிகழ ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்குச் சிறப்பாக அபிஷேகங்களும் பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீ ஞானம்பிகைக்கு நவசக்தி அர்ச்சனை யும் நடைபெற்றன.

நண்பகல் மாகேசுர பூசை சிறப்பாக நடைபெற்றது. மாலை 6 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் குரு மூர்த்தவழிபாட்டிற்குஎழுந்தருளினார்கள். சிறந்தமேளவாத்தியங் களுடனும் திருமுறைப் பாராயணத்துடனும் அன்பர்கள்புடைசூழ வெள்ளிப்பல்லக்கில் எழுந்தருளிய காட்சி சிறப்பிற்குரியதாய் விளங்கியது. வாண வேடிக்கைகள் நடைபெற்றன.

குருமூர்த்தங்களைத் தனித்தனியே தீபாராதனைகள் செய் வித்து அருள்வரலாறுகளைச் சிந்தித்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழிபட்டார்கள்.

இரவு 9 மணிக்கு ஸ்ரீ சொக்கநாதருக்குச் சிறப்பு வழிபாடு; திருமெய்ஞ்ஞானம் நிவேதனம். நல்ல பசுவின் பாலில் சர்க்கரை கூட்டிச் சமைத்துநிவேதித்த இவ்வருட்பிரசாதம் சிறப்புடையது.

10 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கொலுக் காட்சி வழங்கியருளினார்கள். ஒடுக்கம் வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வழிபாடுகள் நிகழ்த்தினர் கள். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு. திரு. N. கிருஷ்ணசாமி செட்டியார் மற்றும் பல பெருமக்கள் நகரப் பிரமுகர்கள் அன்பர்கள் வழிபட்டு அருளாசி பெற்றனர்.

3—6—72 சனிக்கிழமை பட்டணப்பிரவேசம். காலை 9மணிக்கு ஸ்ரீ சொக்கநாதர் வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ ஞான புரீசுவரசுவாமிக்கு சிறப்பாகத் திருமுறைஅர்ச்சனைகள் நிகழ்த்தப் பெற்றன. நண்பகல் 12 மணிக்கு மாகேசுவர பூசை நடை பெற்றது. இரவு 11 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர் கள் பட்டணப்பிரவேசமாக எழுந்தருளி அருட்காட்சி வழங்கினர் கள். சிறந்த மேளவாத்தியங்கள், பொய்க்கால் குதிரை ஆட்டம் முதலிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அன்பர்களுக்கு மாலைகள் அணிவித்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நி தானம் அவர்கள் அருளாசி வழங்கியருளினார்கள். வீடுகளில் பூரணகும்பங்கள் வைத்து வழிபட்டனர். வர்ண வேடிக்கைகள்

நடைபெற்றன. பல்லாயிரவர் புடைசூழ ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சிவமேநிலவும் திருவீதிகளில் பட்டணப் பிரவேசமாக எழுந்தருளி வலம்வந்து திருமடத்திற்கு எழுந்தருளினுர்கள்.

இரவு 5 மணிக்குக் கொலுக்காட்சி நடைபெற்றது. அன்பர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மலர் மாலைகள் அணிவித்து அருளாசி வழங்கியருளினுர்கள்.

### சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்:

## நாயன்மார் குருபூஜை விழா

சென்னை சமயப்பிரசார நிலையத்தில் 1—4—72 அன்று மாலை 6-மணி அளவில் காரைக்காலம்மையார் குருபூஜையும், 10—4—72 அன்று தண்டியடிகள் நாயனுர் குருபூஜையும், 17—4—72 அன்று மங்கையர்க்கரசியார் குருபூஜையும், 19—4—72 அன்று விறன்மிண்ட நாயனுர் குருபூஜையும், 27—4—72 அன்று இசைஞானியார் குருபூஜையும், 28—4—72 அன்று திருக்குறிப்புத்தொண்ட நாயனுர் குருபூஜையும் சிறப்பாக நடைபெற்றன. குருபூஜை நாட்களில் தேவார ஆசிரியர், மாணவ மாணவியர்களால் கயிலைப் பதிகப் பாடல்கள் பாராயணம் செய்யப்பட்டன.

வித்துவான் திரு. ப. வடிவேல் பிள்ளை அவர்கள் காரைக்காலம்மையார் புராணத்தை வாசித்து விரிவுரை நிகழ்த்தினுர்கள். தண்டியடிகள் நாயனுர் புராணத்தை திரு. V. N. ஆறுமுகம் வாசித்து விரிவுரை நிகழ்த்தினுர். திருமதி. மீனுட்சிசுந்தரசிவை அவர்கள் மங்கையர்க்கரசியார் புராணத்தை வாசித்து விரிவுரை நிகழ்த்தினுர். கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும் விரிவுரை நிகழ்த்தினுர்கள். விறன்மிண்ட நாயனுர், இசைஞானியார் புராணங்களை வித்துவான், திரு. க. ஆறுமுகம் அவர்கள் வாசித்து விரிவுரையும் நிகழ்த்தினுர்கள். வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அருச்சனை செய்து வழிபாடு நிகழ்த்தி, பிரசாதங்கள் வழங்கி நன்றிகூறி விழாக்களைச் சிறப்புற உடனிருந்து நிகழ்த்தினுர்கள்.

8-5-72 அன்று அப்பர் சுவாமிகள் குருபூஜையும் 12—5—72 அன்று சிறுத்தொண்ட நாயனுர் குருபூஜையும் 18—5—72 அன்று சேக்கிழார்நாயனுர் குருபூஜையும், 19—5—72 அன்று சோமாசிமாறநாயனுர் குருபூஜையும், 30—5—72 அன்று திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர், திருநீலகண்டயாழ்ப்பாணர், முருகநாயனுர்,

திருநிலநக்கநாயனூர் குருபூஜைகள் நிகழ்ந்தன. அப்பர் சுவாமிகள் குருபூஜையன்று புலவர் திரு. மு. கு. புண்ணியகோடி அவர்கள் திருமுறைப் பாடல்களைப்பாடி புராண விரிவுரை நிகழ்த்தினூர்கள். சிறுத்தொண்டநாயனூர் முதலிய நாயன்மார் குருபூஜை விழாவில் வித்துவான், திரு, ப. வடிவேல் பிள்ளை அவர்கள் புராண விரிவுரையாற்றினூர்கள். நிலைய தேவார வகுப்பு ஆசிரியர் திரு. ஞானப்பிரகாசம் திருமுறைப்பாடல்களைப் பாடினூர்கள்.

30—5—72 அன்று நிகழ்ந்த குருபூஜை விழாக்களில் திரு. N. இராமமூர்த்தி அய்யர் அவர்களும், நிலைய தேவார வகுப்பு மாணவ மாணவியரும் திருமுறைப் பாடல்களைப் பாடினர்.

## வேளூர், கிருத்திகைப் பிரசாதம் வழங்கும்விழா

17—4—72 அன்று வேளூர்க் கிருத்திகைப் பிரசாதம்வழங்கும் விழா திரு. P. V. வெங்கடேஸ்வரன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. வேளூர்த் தேவாரம் திருப்புகழ் முதலியன திரு. சு. ஞானப்பிரகாசம் அவர்களாலும் தேவார வகுப்பு மாணவ மாணவியர்களாலும் நிகழ்த்தப்பட்டன. விழாவிற்கு வந்திருந்த அன்பர்களுக்கு சந்தனக்குழம்பு, விபூதிப்பிரசாதம் முதலியன வழங்கப்பட்டன. ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும்கூறி விழாவினைச் சிறப்புற நிகழ்த்துவித்தார்கள்.

14-5—72 அன்று வைத்தீசுவரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா நிகழ்ந்தது. அன்று நிலைய தேவார வகுப்பு ஆசிரியர் திரு: சு. ஞானப்பிரகாசம் அவர்களும், திரு. ந. இராமலிங்கம் அவர்களும் வேளூர்த் தேவாரம் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடினர். பின்னர் சந்தனக்குழம்பு, விபூதிப் பிரசாதம் முதலியன வழங்கப்பட்டன.

## சோமவார வழிபாடு

சென்னை சமயப் பிரசார நிலையத்தில் 3—4—72, 10-4—72, 17—4—72, 24—4—72 ஆகிய சோமவார நாட்களில் வழிபாடு நிகழ்த்தி திருக்கயிலைப் பதிகப் பாராயணம் செய்து அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. 17-4—72, 24—4—72 ஆகிய நாட்களில் புலவர் திரு. M. K. புண்ணியகோடி முதலியார் அவர்கள் திருவிளையாடற் புராணத்தை வாசித்து விரிவுரை நிகழ்த்தினூர்கள். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் நன்றியுரையோடு விழா இனிது நிறைவேறிற்று.

1—5—72, 8—5—72, 15—5—72, 22—5—72, 29—5—72 ஆகிய சோமவார நாட்களில் திருக்கயிலைப் பதிகப் பாராயணத்துடன் சோமவார வழிபாடு நிகழ்த்தப்பட்டது. அந்நாட்களில் திருவிளையாடற்புராண விரிவுரை புலவர். திரு. மு. கு. புண்ணிய கோடி அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

31—5—72 அன்று சென்னை இராயப்பேட்டை நெடுஞ்சாலையிலுள்ள ஸ்ரீ அப்பர்சுவாமி கோயிலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ காசி விசுவநாதர் ஸ்ரீ விசாலாக்ஷி ஆகிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பட்டன. புலவர். திரு. மு. கு. புண்ணியகோடி அவர்கள் திருமுறைப் பாடல்களை ஓதி அனைவரையும் மகிழ்வித்தார். திரு. V. N. ஆறுமுகம் அவர்கள் நன்றி கூறிய பின்னர் கடவுள் வாழ்த்தோடு சோமவார வழிபாட்டுக் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

## உமாபதிதேவ நாயனர் குருபூசை

சென்னை சமயப் பிரசார நிலையத்தில் 26—4—72 அன்று சந்தானசாரியர்களுள் நான்காமவராகிய உமாபதி தேவ நாயனர் குருபூஜை சிறப்பாக நடைபெற்றது. திருமுறை அருச்சனை செய்து அன்பர்களுக்கும் குழந்தைகளுக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. மாலை 7 மணி அளவில் டாக்டர். திரு. வி. ஆர். ராமபாண்டியராஜ் பி.எஸ்சி., எம்.பி.பி.எஸ். அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. 'குருவழிபாடு' என்ற தலைப்பில் வித்வான், திரு. க. ஆறுமுகம்அவர்களும் "உமாபதிசிவம்" என்ற தலைப்பில் வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களும் "சிவப்பிரகாசம்" என்ற தலைப்பில் சித்தாந்தப் புலவர் மணி, ந. ரா, முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். அவர்களும் சொற்பொழிவாற்றினர். தலைவர் அவர்கள் தமது உரையில் 'திருமுறைகள் உயிருள்ளவை. அவை மனிதனை உயர்ந்தநிலையில் வாழவைக்கிறது. நான் ஐந்து ஆண்டுக்காலம் இருதய நோயால் துன்பப்பட்டேன். படுத்த படுக்கையாக இருந்து கொண்டே திருமுறைகளைப் படிக்கக் கேட்டேன். என் இருதய நோய் சிறிது சிறிதாக நீங்கிவிட்டது' என்று கூறித் தமது அனுபவவாயிலாகத் திருமுறையின் சிறப்பை விளக்கினர்கள். மேலும், ஒவ்வொரு மாதமும் மூன்ருவது ஞாயிற்றுக்கிழமையன்று மயிலாப்பூர் திருக்கோயிலில் 40 ஓதுவார்களைக்கொண்டு திருமுறைகளை ஓதச்செய்து வலம்வந்து, வழிபட்டு ஓரிடத்தில் அமர்ந்து திருமுறைப் பாடல்களைக் கேட்டு மகிழ்கின்றேன் என்றும் குறிப்பிட்டார்கள்.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

## திரு. K. முத்துஜோதிடர்

( பரிதாபிஸ்ரீ ஆனிமீ 1உ முதல் 32உ முடிய )
( 14—6—72 முதல் 15—7—72 முடிய )

ஷை வருஷம் ஆனிமீ முதல்தேதி உதயாதி நாழிகை 28 விநாடி 4-க்கு, விருச்சிக லக்கினத்தில் பகல் நான்காவது யாமத்தில் விஷகடி வேளையில் ஸ்ரீ லோகரக்ஷகரான ஸ்ரீ சூரிய பகவான் விருஷபத்திலிருந்து மிதுனராசி சங்கிரமணம் செய்கிறார். ஷை வருஷத்துக்கு பிரஹஸ்பதிபகவானே ராஜாவாகவும் மந்திரியாகவும், அமைந்தபடியால் ஷை ஆனி மாதப்பிறப்பு தோஷகால சங்கிரமண பலனை உலகிற்கு கொடுக்காமல் தடுத்து சுபபலனைக் கொடுக்கும்படி அருள்புரிய சகல ஆஸ்தீக சஜ்ஜனங்களும் பிரார்த்திக்க கிரகசஞ்சாரங்களும் முன் எச்சரிக்கை உலகத்துக்குச் சொல்வதுபோல் அமைந்திருக்கிறது. மானுஷாத்புதங்கள் விருத்தியாகும். அதை வர்ணிக்க முடியாது. லோகரக்ஷகரான ஸ்ரீ பகவான் சகலபிரஜைகளுடைய இருதயத்திலும் தோன்றி, நல்லபலனை அருளவேணும். சுபமுண்டாகுக.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். தூரதேசயாத்திரையும், விவாகாதி சுபகாரியங்களும் மேல்பதவிகளும், கிரயவிக்ரயத்தில் லாபமும் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்,

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும், தொழில் மாறிக்கொண்டே இருக்கும். செலவுகள் அதிகமாகும். சில வியாபாரங்களால் கடன் நீங்கும். புத்திரோத்பத்தி உண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

**3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾**

மிதுனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். புதிதான முறையில் தொழில் விருத்தியும், மேலோர் பெரியோர்களின் அன்பும் தெய்வசக்தி அதிகமாகுதலும் அனேகமான அற்புதமான காரியங்களும், ஏற்படும். நஷ்டமான பொருள்கள் வந்து சேரும். குடும்பம் ஓங்கும். ஞாயிறு, திங்கள், சுபமாகும்.

**4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.**

கடகராசி 9 பாதங்களும் விசேஷமான நன்மைகளைக் கொடுக்கும். உலகப் பிரசித்தி ஏற்படும். தொழில் ஓங்கும். குடும்பம் ஓங்கும். தெய்வபலம் முன்னின்றுகாக்கும்- புத்தியில் சதா குழப்பம் இருந்துகொண்டே இருக்கும், செவ்வாய், புதன் சுபமாகும்.

**5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼.**

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பம் விருத்தியாகும். புத்திரோத்பவம் முதலிய சுப காரியங்கள் ஏற்படும். தொழில் விருத்தியும். அதிகமான பொறுப்பும், கடமைகளும் ஏற்படும். ஆரோக்யம் உண்டுபண்ணும். இடம் மாறுதல் ஏற்பட்டு சுபம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½.**

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். எதிர்பாராத நன்மைகள் தானாகவே வந்து சேரும். புத்திராதிகளால் விசேஷ நன்மை ஏற்படும். ஜீவனத்தின் பொருட்டு பலவிதமான செயற்கைக் காரியங்கள் செய்யும்படி இருக்கும். ஆஸ்திக புத்தியும், தெய்வபலமும் அதிகமாகும். சனி, ஞாயிறு சுபமாகும்

**7, துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾**

துலாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். கிரகசுகம் ஓங்கும். சுபகாரியங்களாலும் தெய்வீக காரியங்களாலும் அடிக்கடி சஞ்சாரம் உண்டாகும். குடும்பத்தில் சுபசோபனாதிகள் நடக்கும். கீர்த்திப்பத்திரம் கிடைக்கும், குடும்பத்தில் அதிக செலவுகள் எதிர்பாராமல் இருக்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமாகும். அடிக்கடி அலைச்சல்கள் இருந்துகொண்டே இருக்கும். புத்திராதிகளால் விசேஷமான நன்மைகள் ஏற்படும். விவாகாதி சுபகாரியங்களும், நல்ல காரியங்களும் நடந்துகொண்டே இருக்கும். செலவுகள் அதிகமாக இருந்துகொண்டு இருக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனூர் ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனைத்தரும். வரவு செலவுகள் சமமாக இருக்கும். புதிதாகப் பிரபுக்கள் தரிசனத்தால் எல்லாக்காரியங்களும் சாதிக்கமுடியும் ஜீவனசுகம் உண்டாகும். ஆரோக்யம் உண்டுபண்ணும். வெள்ளி சனி சுபமாகும்

10. மகரம்–உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபமாகும். உத்தியோகத்தில் அதிகமான பொறுப்பும், குடும்ப சுகமும் உண்டாகும், தூர தேசத்திலிருந்து அழைப்புகள் வரும், புதிதாக ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் தானுகவந்துசேரும். சகல காரியங்களும் தவக்கத்தோடு பூர்த்தியாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½ சதயம் –பூரட்டாதி–¾,

கும்பராசி 9 பாதங்களும் முதல் 15ம் தேதி வரையில் மிச்சிரமான பலனும் பின்பு 15ம் தேதியில் சுபமான பலன்களும் ஏற்படும். இருப்பிடத்திலேயே தொழில் விருத்தியாகும். கீர்த்தி உண்டாகும். கிரஹசுகம் அதிகமாகும். செலவினங்களும் அதிகமாகவே இருக்கும். தெய்வபலம் முன்னின்று எல்லாக்காரியங்களும் சாதித்துத் தரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். கிரஹசுகம் ஓங்கும். செலவினங்கள் அதிகமாகும், புதிதாகச் சில காரியங்கள் ஆரம்பமாகும். பெரிய மனிதர்களின் சினேகிதமும் உண்டாகும். உறவினர்களின் சுபகாரியங்களைக்கொண்டு அடிக்கடி சஞ்சாரம் இருந்துகொண்டே இருக்கும். வெகு நாட்களாக எதிர்பார்த்து நடக்காத காரியங்கள் நடந்துவிடும். தெய்வபலத்தால் யெல்லாம் சுபமாகும்.